KALANILAYAM                                   தனிப்பிரதி விலை அணா மூன்று.

# கலாநிலயம்

**A Literary Weekly**

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 5]                 1932 ஸு ஜூலை மீ 21உ                 [No. 28

பொருளடக்கம்.


| | | | |
|---|---|---|---|
| 1. தலையங்கம் (Leader) | 541 | 6. அப்பர் (64 கலைகள்—தர்க்கம்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. | 549 |
| 2. குன்றுடையானும் மக்களும் W.V. கோவிந்தசாமி ராஜு B.A.,L.T. | 543 | 7. எல்லாம் வீணே (ஓர் சிறுநாடகம்) G S. இரகுராமன் B.A. | 551 |
| 3. நம்மாழ்வார் வைபவம் (3-ம் பத்து, 3-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L., | 544 | 8. ஷெல்லி—P. C. ஜயவேலு | 552 |
| 4. தமிழ்ப்பாடம் நளவெண்பா - கலிதொடர்காண்டம் | 545 | 9. கம்பராமாயணம் (கரனவதைப் படலம்) T. N. சேஷாசலம். B.A. B.L. | 553 |
| 5. பெனிடிக்ட் டி ஸ்பைனோஸா T. R. இராஜகோபால் | 548 | 10. பொதிகைநிகண்டு S. வையாபுரிப் பிள்ளை B.A., B.L., | 555 |
| | | 11. வர்த்தமானம் | 559 |


## கலாநிலயம்

### விருப்பமும் கருவியும் 3.

எண்ணுவதொன்றும் பண்ணுவதொன்றும் இறுதியில் முடிவதொன்றுமாய் எஞ்சுகின்ற இம் மானுடநிலைமைக்குப் பெரும்பாலுந் தோன்றாக் காரணமாயிருப்பது, 'நாம்' என்னும் அப்பொல்லாத சொல்லின் வேடம் பூண்டு நடிக்கின்றவோர் மெல்லிய நய வஞ்சகமே என்பதை எவ்வளவு விரைவில் மனிதர் தெளிகின்றார்களோ அவ்வளவும் அறிவுடைய உண்மை உபகாரத்திற்கு ஆதாரமாகும். செய்பவர் திறத்தில் இந்தத் தன்மைப்பன்மையில் தழைக்கின்ற இவ் வஞ்சனை செய்யப்படுகின்ற முன்னிலையிலும் படர்ந்து வளர்கின்றது. "உங்களுடைய நன்மைக்காகத் தொண்டுபுரிய முன்வந்துளேன்" என்று முழங்குகின்றவர், "உன்னுடையவருத்தம் இதுவோ, ஆயின் அதனை அகற்றுகின்றேன்" என்று ஒரு தனி மனிதனுக்குச் சொல்லத்தானும் நினைக்கமாட்டார். எல்லாத்தொண்டுகளினும் இந்த விபரீதத்தைக் காணலாமெனினும், தொழிலாளர் இயக்கங்களுக்குத் தலைவர்களாயிருக்கின்ற தொண்டர்களைக்கொண்டு இதனைச் சோதிப்பது எளியதாகும். இந்தியாவின் ஏழ்மைக்கு இரங்கி யிரங்கி மாழ்குகின்றவர்களிடத்தும் இந்தக்கரவு பெரிதும் வெளிப்படுகின்றது. இங்கிலாந்திலுள்ள ஒவ்வொருவனும் நாளொன்றிற்குச் "சராசரி" மூன்று ஆப்பில் பழங்கள் தின்கின்றான் என்ற கணக்கை எங்கேயாயினும் பார்த்துவிட்டால், ஊமைவாய் ஏழைகள் எத்தனையோ கோடி இருக்கின்ற இவ்விந்தியாவின் வறுமை நிலைகண்டு இரக்கம் பெருகுகின்ற பல பொதுஜன உபகாரிகள் பொதுக்கூட்டங்களிற் பேசும்போது, "என் அருமைச் சகோதரிகளே, சகோதரர்களே, நீங்களே பாருங்கள். என்ன அநியாயம். உங்கள் பணத்தைப் பலவகைகளில் கொள்ளையடித்துக்கொண்டு போகின்ற வெள்ளைக்காரர்களில் ஒவ்வொருவனும் ஒவ்வொருநாளும் மூன்று ஆப்பில்பழங்கள் வீதம் தின்கின்றான்; நீங்களோ மூன்று வருடத்திற்கு ஒரு பழமேனும் கண்ணாலுங் கண்டதில்லையே. அவர்கள் செல்வத்தையும் உங்கள் வறுமையையும் பாருங்கள். களாப்பழமும் உங்களுக்கு அரிதாகிக்கிடக்கின்றது", என்று ஏக்கமுடன் எடுத்துக்கூறி இந்த வறுமையின் கொடுமையைத் தீர்ப்பதற்குத்தான் தம்முடைய உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் அர்ப்பணஞ்செய்ய முன்வந்திருப்பதாகச் சத்தியஞ் செய்வதைக் கேட்டிருக்கின்றோம். தேர்தல்களில் ஓட்டுப்பிச்சை எடுக்கவருகின்றவர்கள் மாத்திரந்தான் இப்பாடமும் பாட்டுங் கற்றிருக்கின்றார்கள் என்று எண்ணவேண்டா. பிரதிபலன் ஒன்றும் வேண்டாமல் பரிவின் மிகுதியினாலேயே இவ்வண்ணம் பேசுகின்ற தொண்டர்களுஞ் சிலர் இந்நாள் இலராகார். இதனைக் கேட்கின்றவர்களும் "ஐயோ, கெட்டோம் நாம்" என ஆப்பில் பழத்திற்கு அங்ஙனே அங்காந்து ஆப்பில்பழந் தின்னாத தம் நாட்டினர்பால் பரிவும் தின்கின்ற அவ் வாங்கிலேயர்பால் அழுக்காறுடைய

கடுவெஞ் சினமுங் கொள்கின்றனர். பாவம், இப்பேதைமையின் பழி முழுவதும் இவர்களையே சேர்கின்றதென்று செப்புவதுந்தகாது. சராசரிக் கணக்குச் செய்கின்ற சதியோ மிகப்பெரிது. ஆசையால் மயங்கிய மானுடமதி அச் சதியினுக்கு எளிதில் ஆளாகிவிடுகின்றது. அதனின்று தப்புவதற்கு வேண்டிய பகுத்தறிவும் ஆராய்ச்சியும் எல்லோரிடத்திலும் எதிர்பார்ப்பது எங்ஙனம் அமையும்? பத்து மாம்பழங்களை ஐந்துபேர் கொணர்ந்து சுற்றி உட்கார்ந்துகொண்டு அவர்களில் ஒருவனே அப்பத்துப் பழங்களையும் தின்றுவிட்டு எழுந்துபோகையில் மற்றவர்களை நோக்கி, "நாம் இப்பொழுது சராசரி ஆளுக்கு இரண்டு பழம் தின்றிருக்கின்றோம்" என்பானேல் பிழைகாண வல்லார் யார்?

இவ்வண்ணம் சராசரிக் கணக்கை உயர்த்துவதற்காகத் தொண்டுசெய்வதில் "உங்களுக்கு எங்கள் உடல் பொருள் ஆவிகளை அர்ப்பணம் செய்கிறிற்கின்றோம்" என்னும் இனத்தவர் எண்ணிறந்து வளர்கின்றாரானும், "உனக்கு என் பொருளைத் தருகின்றேன்" என்று தன்மை முன்னிலை இரண்டிடத்தும் ஒருமை வைத்து உபகாரம் செய்வதன் தகுநிலையைச் சிந்தித்துச் செய்யப்புகுபவர் எத்தனைகாலம் எத்தனை இடங்களில் தேடினால் ஒருவர் தென்படுவார் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ! தன்மையைப்போல் முன்னிலையிலும் பன்மையை ஓர் மறுதலைப் பாதகம் சூழ்ந்துகொள்கின்றது. "உங்களுக்குத்தின்ன ஆப்பில்லையே" என்று உள்ளம் உளைந்து கரைவான் ஒருவன், "அப்பா, நீ பசியாயிருக்கின்றாய், இந்தா இந்நான்கணாவைக்கொண்டுபோய் உணவுகொள்" என உபகரிக்கவேண்டும் என்று நினைக்கத்தானும் நினைப்பதில்லையே. பசியென்று இரந்து வந்தவனை, இப்பொதுஜன சராசரி உபகாரிகள், துரத்திபடிப்பதால் தாம் யாதும் குறையுற்றதாகக் கருதவும் காண்கிலம். தொழிற்கட்சித்தலைவர் ஒருவர், செல்வமும் வாய்ந்தவர், தொழிலாளர்களின் நிலைமையை உயர்த்தி அவர் சராசரி வருவாயை அதிகப்படுத்துவதற்கு அளவற்ற முயற்சியுடையவர், மனிதராய்ப் பிறந்தார்க்கெல்லாம் உண்டுடுத்துறைவதற்கு வேண்டளவு கூலிபெற உரிமையுளதென்றும், அதனையும் மறுத்தல் அநீதியென்றும் பொதுமுறையிற் பற்பல விதங்களில் வற்புறுத்திப் பேசும் நாவன்மை மிகவுடையர், இத்தகையவர் வேலையாள் ஒருவன் தனக்கு வேண்டும்போது என்ன செய்கின்றார்? குறைந்த கூலிக்கு மிகுந்த வேலை வாங்கிக் கொள்ளும் வகையையே அவர்மனம் அவருக்குந் தெரியாமல் நாடுகின்றது. மோட்டார்வண்டி ஓட்டுவதற்கு ஒருவனை அமர்த்திக்கொள்கையில் அவன் தனக்கு முப்பத்தைந்து ரூபாய் சம்பளம் வேண்டுமென்றால், "அது நடவாது, மோட்டார் ஓட்டிகள் மலிந்திருக்கின்ற இக்காலத்தில் முப்பது ரூபாய்க்குமேல் ஒரு காசு கொடுக்கமாட்டேன்" என்கின்றாரே யொழிய, "அப்பா, உனக்கு மனைவியுண்டோ, மக்கள் எத்தனைபேர், பெற்றோரைக் காப்பாற்றவேண்டியிருக்கின்றதோ, குடிக்கூலி எவ்வளவு கொடுக்கின்றாய்," என்ன அவன் நிலைமையைக் கேட்டறிந்து, "ஆயின், உனக்கு முப்பத்தைந்து ரூபாய்தான் எவ்வாறு போதும், சம்பளம் ஐம்பது ரூபாயாகத் தருகிறேன், பெற்றுக்கொள்" என இயம்பவுங் கூடுமென்று எவரேனும் நினைத்திருக்கின்றாரோ! இப்படி இவர் செய்வது உலோபகுணத்தால் பதினைந்து ரூபாய் அதிகம் கொடுக்க மனம் வராமற்கூறுகின்றாரென்றேனும், முன்னிவர், தொழிலாளர்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று ஊக்கமுடன் உரைத்த சொற்களத்தனையும் நெஞ்சறிந்த பொய்களென்றேனும் கடிந்திகழ்ந்தால், அதுதான் அவருக்குப் பொருந்தாத பெரும் பழியாகும். மாதம் பதினைந்து ரூபாய் இவருக்குப் பெரிய காரியமன்று. எத்தனையோ பதினைந்துரூபாய்கள் செல்லுமிடந்தெரியாமலும்செல்லத்தகாவகைகளிலும் செலவாகிவிடுகின்றன. எனின், தனியாளாக வந்து தன்நிலை தெரிவித்து நிற்கும் ஒருவனுக்குத்தான், பொதுவகையில் பேசுங் கொள்கைகளுக்கிணங்க, உபகாரம் செய்யவேண்டும் என்ற எண்ணம் இவருக்கு உதிப்பதில்லை—இத்தனையே குறை. மற்று, மோட்டாரோட்டிகள் மகாநாடு ஒன்று கூடுமாயின் அதன்கண் தலைமைவகிப்பதுமன்றி பந்தற் செலவு ஆயிரம் ரூபாயுந் தானே ஏற்றுக்கொள்வார். புகழிற்கும் பூமாலைக்கும் பத்திரிகைகளில் படத்திற்கும் நசைகொண்டு இவ்வாறு செய்கின்ற சில பெரியமனிதரை நினைவிற்கொண்டு நாம் இவைகளைச் செப்பவில்லை. உண்மையிலேயே பொதுஜனத் தொண்டு புரியவேண்டுமெனும் எண்ணமுடையவர்களாகி, மகாநாட்டிற்குப் பந்தல் போட்டுத்தருவதுதான் செய்யவேண்டிய தொண்டே என நிச்சயமாய் நினைத்திருப்பவர்களைப் பற்றியே இது உரைக்கின்றோம். முன்னிலைப்பன்மை செய்கின்ற வஞ்சனைக்கு ஆளாகி இவ்வண்ணம் விபரீதப்படுகின்றார்களேயன்றித் தாமே வஞ்சனைகள் பேசும் கள்ளமோ இவர்களுக்கில்லை. இந்தச் சூழ்ச்சியை இன்னுமொரு மிகச் சிறிய செய்தியிலும் காணலாம். இந்திய ஏழைமக்களின்பால் நமக்கிருக்கின்ற இரக்கத்திற்கு உண்மையான அடையாளம் கதராடை. அதனை உடுக்கின்ற நாம் வெளிவேடம் புனைந்துகொள்கின்றோம் அல்லோம் என்பது பெரும்பாலும் நிச்சயம். கதராடை வாங்கும்போதெல்லாம், அதன்பயன் அரைவயிற்றுக்கும் வழியில்லாத ஏழைமக்களைச் சென்றடைய வேண்டுமென்பதே நம்முடைய நிலைத்த நம்பிக்கையும் விருப்பமுமாகும். பொதுஜன நன்மைக்காக நமது உடல்பொருள்ஆவிகளால் நாம்பற்பலவகைகளில் தொண்டுசெய்யக் கடமைபூண்டிருக்கின்றோம் என்பதையேகாட்டுகின்றது அது. அவ்வண்ணம் செய்கின்ற நன்மக்களும் எண்ணிறந்தோர். எனினுந் தனித்த ஏழை ஒருவனிடத்தில் எவ்வாறு ஒழுகுகின்றோம்? வெய்யில்வேளையில் தெருத்தெருவாய்த் திரிந்துசுமந்த கூடையின்கீழ் வியர்த்த முகத்தினனாய் ஒருவன் நம் வீட்டினுள்வந்து "மாம்பழம் வாங்குவீர்களோ" என்றுகேட்டால் அவன் சொன்ன ஆறணாவிலையைக் குறைத்து மன்றாடி நாலரையணாவிற்கே ஒரு "டஜன்" வாங்கித்தின்ன எத்தனைபாடுபடுகின்றோம். இவன் ஏழை அல்லனோ? ஆறணாசொன்ன விலைக்கு ஏழணாவாகச் சேர்த்துக்கொடுத்தால் ஆகாதோ! கதராடை வாங்குவதில் ஒரு அணா முழுவதும் ஒரு ஏழையைப் போய்ச்சேர்கின்றது என்ற நிச்சயம்தெளிவது அருமை. எனினும் கண்காணா அப்பாத்திரத்திற்கு இரங்குகின்ற நம் உள்ளம் கண் எதிரே காணும இவனைக் கருதுவதும் இல்லையே. ஏன்? அவர் பன்மையில் பெருகுகின்றார், இவன் ஒருமையில் நிற்கின்றான். இடையிலே நாம் ஆவனசெய்ய அயர்ந்து போகின்றோம்.

# குன்றுடையானும் மக்களும்

## இரண்டாம் புத்தகம் — 4. பன்றிப்போர்

[527-வது பக்கத் தொடர்ச்சி]

சிற்றாலைப்பட்டணத்துக்கு அண்ணன்மார் திரும்பிவந்த அன்றே,பன்றியும் வீரமலைக்காட்டை விடுத்து வளநாட்டினுட் புகுந்து வேளாண்குளத்தை யடைந்து, அயலிலிருந்த ஒரு சங்கன்புதரிற் படுத்து, வழிநடந்த களைப்புநீங்க உறக்கங்கொண்டது. நள்ளிரவில் பசிகாணுதலும், அப்பன்றி யெழுந்திருந்து பக்கத்திலுள்ள வயல்களில்நுழைந்து வேணுமட்டும் நெற்கதிர்களைக் தின்று, குளத்துநீரை வயல்களிலோட்டி, வயல்களை யழித்துவிட்டு மீண்டும் படுத்துத் தூங்குவதாயிற்று.

மறுநாட்காலையில் அண்ணன்மாரது வயலைப் பார்க்கும் பள்ளர்தலைவனும் அவனுடைய ஆட்கள் சிலரும் சென்று வயல்களும் குளமும் அழிந்திருத்தலைக்கண்டு தலைதலையா யடித்துக்கொண்டு தேடித் திரிகையில், சங்கன்புதரிலே பன்றியைக் கண்டு, நல்ல வேட்டை கிடைத்ததென்று களிப்புற்று, அதைப் பிறர் உதவியில்லாமல் தம்மினத்தாரைக் கொண்டே கொன்று கூறுபோட்டுத் தின்னவேண்டுமென்று தீர்மானித்து, சேரிக்கு ஓடிச்சென்று, இந்நற்செய்தியைக் கூறி, பள்ளர்களையும் நாய்களையும் கூட்டிக்கொண்டு வந்து சங்கன் புதரைச் சூழ்ந்துகொண்டனர். பள்ளர்தலைவன் புதரை யணுகஅஞ்சி, எட்டிநின்று,கைச்சாடை காட்டி ஆட்களை ஏவினான். நாய்கள் முந்துற்றுப் பன்றியை நோக்கிக் குரைத்தன. பன்றி அந்நாய்களைப் பொருட்படுத்தாமல் பாதி விழித்த கண்ணும் பாதி மூடிய கண்ணுமாய்ப் படுத்துக்கிடந்தது. நாய்கள் சிறிது தைரியமடைந்து அதைக் கடிக்கத் தலைப்பட்டன. அப்பன்றிக்கு நாய்கள் கடித்தமை சுள்ளெறும்பு கடித்தாற் போல் தோன்ற, அது சற்றே புரண்டு படுத்தது; படுக்கையில் அங்கு நின்ற நாய்கள் அதன் விலாப்புறத்திலகப்பட்டுக் கசங்கிப்போயின. மற்றை நாய்கள் ஓடிப்போய் விலகிநின்று குரைத்தன. பள்ளர் வேலும் வில்லுந் தாங்கி யதைச் சூழ்ந்தனர்.பன்றி கடைக்கண்ணாற் பார்த்து, மறுபுறம் புரண்டு படுத்தலும், பள்ளர் பலர் அதன் வயிற்றிற்கும் நிலத்திற்கும் இடையே அகப்பட்டு உயிர் துறந்தனர். 'ஐயோ! அப்பா! அம்மா!' என்னும்பேரொலி எங்கும் கேட்டது. பன்றி மெல்ல எழுந்து, வாலை முறுக்கி, உறுமிக்கொண்டு பாய்ந்தோடி, அங்குநின்ற பள்ளர்களையும் நாய்களையும் தன் காலால் மிதித்தும் கொம்பால் குத்தியும் கொன்று குவித்தது.

விலகிநின்ற பள்ளர்தலைவன் தன் இனத்தார் மடிந்ததைக் கண்ணுற்று, சேரிக்கு ஓடி, அங்கே தம் கணவர்கள் பன்றிக்கறி கொண்டுவருவார்களென்று களிப்புற்று மிளகரைக்கும் பெண்டிரிடத்தில் நிகழ்ந்தது கூறுதலும், அச்சேரிமுழுதும் அழுகுரலால் நிறைந்தது. கறிக்கரைத்த மிளகு கருமாதிக் காயிற்று.

பன்றி மீண்டும் அப்புதரிலேயே படுத்துறங்கி இரவு பதினைந்து நாழிகைக்கு எழுந்து, மீந்திருந்த அண்ணன்மார் வயல்களை யெல்லாம் அழித்து, கொப்பு தீட்டி ஏருழுது, வேளாண்குளத்தைக் கலக்கிச் சேறாக்கி, வெண்கல மதகுக்குப்பக்கத்தில் படுத்துக் கண்ணயர்ந்தது.

மறுநாள் வேளாண்குளத்துச்சேற்றுநீரின்மேல்தன் செவ்விய கிரணங்களைப் பரப்பிப் பொழுதுவிடிந்தது. வேளாண்குளத்தூர்ச் சிவன்கோவில் நம்பியான் வழக்கம்போல் குளத்தில் நீராடுதற்குச் செம்பைக் கையிற் பற்றி யங்குத் தோன்றினான். குளம் சேறுபட்டிருத்தலைக் கண்டு அவன்,' 'இது என்ன இழவு! குளம் கலங்கியிருக்கிறது வேட்டிதுவைக்கத் தண்ணீர் காணவில்லை' யென்று முணுமுணுத்து, சுற்றிவந்து மதகையடைந்தான். அங்கே படுத்திருந்த பன்றி யவனைக் கடைக்கண்ணாற் பார்த்து, 'நில்' என்று சொல்வது போல் உறுமி, எழுந்திருந்து மெல்ல நடந்து அவனை யணுகிற்று. நம்பியான் அதன் உருவைக் கண்ட அளவிலே பேதுற்று மென்றுமென்று விழித்தான். பன்றியவனைச் சேற்றில் நன்றாய் உருட்டிப் புரட்டியது. அவன், ஐயையோ! என்றோலமிட்டு எழுந்து தப்பியோடினான். அப்பொழுது பன்றி உறுமிய உறுமுதல், 'அடே, நம்பி, ஓடிப்போய் அண்ணன்மாரிடத்தில் நான் வந்திருக்கிறேன் என்று சொல்' என்றது போன்றிருந்தது. நம்பியான் வீடுபுகுந்து, குளிர்காய்ச்சலாற் படுக்கை சேர்ந்தான்.

பன்றி, வேறொரு புதரையடைந்து அன்று பகலெல்லாம் படுத்திருந்து, நடுச்சாமத்தில் எழுந்து, மற்றுஞ் சில வயல்களையழித்து, நெல்லையே தின்றதால் அதனிடத்து அருவருப்புற்று, அவ்விடத்தினின்றும் பெயர்ந்து சென்று, தங்காளது நந்தனவனத்தையடைந்து, அவ்வனத்தை யழித்துத் தாறுமாறாக்கி, ஒரு வில்வமரத்தினடியிலே, மணற்றரையிலே படுத்து மெய்ம்மறந்து தூங்கிற்று.

மறுநாட்காலையில் சப்புலிங்கப் பண்டாரம் பூப் பறிப்பதற்குக் குடலையை யெடுத்துக்கொண்டு நந்தவனத்துக்குப் போனான். மரங்கள் ஒடிந்துகிடந்தன. பூஞ்செடிகள் வேரோடு வீழ்ந்திருந்தன. வனமெல்லாம் உழப்பட்டுச் செம்புழுதி நிறைந்திருந்தது. அவன், 'இது என்ன விந்தை! தங்காளுடைய பூந்தோட்டத்தில் நுழைந்தவர் யார்? செல்லாண்டியம்மனுக்குப் பூவெங்கே? தங்காளுக்குப் பூவெங்கே? அண்ணன்மாரறிந்தால் யாது நேரிடுமோ!' என்று சொல்லிக்கொண்டு வருகையில் அங்கே வில்வமரத்தைக் கண்டு இன்று வில்வத்தைக்கொண்டுதான் பூசை செய்யவேண்டும் என நினைத்து, அம்மரத்தை யண்ணாந்து பார்த்தபடியே, அதனடியிற்கிடந்த பன்றியைக் கருங்கற்பாறையெனக்கருதி அதன்மேற் கால்வைத்து ஏறி, குடலைநிறைய வில்வத்தைப்பெய்து இறங்குகையில், பாறை சிறிதே அசையக்கண்டும் உற்றுப் பாராதவனாய்த் தரையையடைந்து, பத்துமுழத் தூரம் நடந்தான். அப்பொழுது, 'நில், போகாதே' என்று சொல்வதுபோல் பன்றி உறுமி யெழுந்துவந்தது. பண்டாரம் திரும்பிப்பார்த்து வெருண்டு ஓடினான். பன்றி அவனைத் துரத்திப் பிடித்துக் கீழே தள்ளி உருட்டிப் புரட்டுதலும் அவன், 'ஐயையோ! அம்மம்மா! என்று

கதறி, மீண்டும் எழுந்து ஓடினன். பன்றியவனைப் பின்னும்சிறிது தூரத்தவே, சம்புலிங்கம் பூக்குடலை ஒருமூலையிலும் மேல்வேட்டி ஒரு மூலையிலும் பறந்துவிழஓடி, அரண்மனையை யடைந்து, அண்ணன்மார் முன்னிலையில் வீழ்ந்து முறையிட்டான்.

பன்றி அவ்விடத்தினின்றும் பெயர்ந்து வேளாண்குளக் காட்டுக்குப் போய்ப் படுத்திருந்தது.

பண்டாரத்தின் முறையைக் கேட்டுச் சின்னண்ணன், 'இதோ! கொன்றேன் அப்பன்றியை' என்று சொல்லி வாளையுருவினன்.பெரியண்ணன் தம்பியைக் கையமர்த்தி, 'அப்பா, இப்பன்றியைக் குறித்துச் சோழமன்னர் சொன்னதைக் கேட்டுவைத்தும் நீ தனியாய்ப் போவது தகுமா? படையோடு போகவேண்டும். இன்று வேட்டைசாற்றி, நாளைக்குப் புறப்படுவோம்' என்று சொல்லித் தேற்றி, சாம்பானைக் கூப்பிட்டு, 'நாளைக் காலையில் நாம் பன்றிவேட்டைச்குப் போகவேண்டும். பட்டிக்கொரு நாயும்வீட்டுக்கோ ராளும் கட்டிச்சோற்றோடு நாளைப் பொழுதுவிடிகையில் வேளாண்குளத்துக்கு வரவேண்டும் என்று பறைசாற்று," என்று கட்டளையிட்டார்.

சாம்பான் வெண்கலப் பேரிகையை யெடுத்து வெய்யில் முகத்தில் வைத்து,யானைமீதேற்றி வீதிதோறும் வேட்டைசாற்றினன்.

அண்ணன்மார் பன்றிகுத்த வேல்கள் வேண்டுமென்று அவ்வூர் மாடக்கொல்லனை யுள்ளிட்ட ஐம்பதின்மர் கம்மியரை யழைப்பித்து, ஐம்பதுமுழ நீளமும் பத்துமுழ அகலமுமான வேல்கள் நூறும், சிறுவேல்கள் ஐந்நூறும் பொழுதுவிடியுமுன் செய்துவரப் பணித்தனர். கொல்லர் அதுகேட்டு ஊரை விட்டோட நினைத்தனராயினும், போக்கிடமின்மையாலும், அண்ணன்மாரது அதிகாரத்துக் கஞ்சினமையாலும் வாய் பேசாமல் ஊருக்கு மேற்கே உலைக்களமிட்டு, வேட்டிகளை விசிந்துகட்டி, வேலைதொடங்கி இரவுமுழுதும் உழைத்து, பொழுது விடியுமுன் வேல்கள் செய்து முடித்து அண்ணன்மாருக்கு அறிவித்தனர்.

மறுநாட்காலையில் அண்ணன்மார் வேட்டைக்கோலம் பூண்டு, சாம்பானைக் கூவி 'வேளாண் குளக்கரையில் வேட்டையாட்களையும் படையையும் திரட்டு, நாங்கள் தங்காளிடத்தில் விடைபெற்று வருகின்றோம்' என்று சொல்லித் தங்காளது அரண்மனைக்குப் போயினர்.

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

[535-வது பக்கத் தொடர்ச்சி]

### 3-ம் பத்து 3-ம் தசகம்.

#### 6-ம் பாசுரம்.

வேங்க டங்கண் மெய்மேல் வினைமுற்றவுந்
தாங்க டங்கட்கு நல்லனவே செய்வார்
வேங்க டத்துறை வார்க்கு நமோவென
வாங்க டமையது சுமந்தார் கட்கே.

உரை:—வேங்கடத்துறைவார்க்கு - திருவேங்கடத்தில் ஸ்ரீநிவாஸனுக்கு-(பின்னர் ஏழாம்பத்தில் அவர் மேல் "மங்கையுறை மார்பா" என்று அருளிச் செய்வதை இங்கு ஞாபகப்படுத்திக்கொள்வது உசிதம்). நமோவென - நமவென்று கூறுதல், (ந - நான், மம - எனக்குரித்தேனல்லன்; அதாவது, நான் பகவானின் தாஸபூதன், அவன் பிரயோஜனத்துக்காக நான்அவனு பொருட்டே எதையும் செய்யக்கடவன் என்ற தத்துவ உணர்ச்சியால் துணிந்து நடத்தல்) ஆம்-இந்த உணர்ச்சிஆராய்ந்தறிபவர்கள் தன் சொந்த சுயரூபத்துக்குத் தகுதியென்ற-கடைமை-தங்களுக்குத் தாமே செய்துகொள்ளவேண்டிய உரிமை. அது-அந்தக் கடமையை, சுமந்தார்கட்கு-இப்படிமனோபாவத்தினால் ஏற்றுத்தம் நடவடிக்கைகளில் அநுஷ்டிப்பவர்க்கு, கடங்கள்-கடன்கள் என்றபதத்தின் திரிபு. அதாவது கடன்பட்டார் போல் துயர்படும் ஸஹிக்கக்கூடாத கஷ்டங்களும் இங்குஜன்மமெடுத்தனுபவிக்கும் பூர்வஜந்மபாவபலங்களும். மேல்வினை முற்றவும் - இனிப் பலம்கொடுக்க நிற்கின்ற பூர்வகர்மங்களின் கொடுமைகளும், வேம் - நசித்துபோம், மெய் - இது ஸத்தியம். இப்படிக்குச் செய்கிறவர்கள் தாங்கள் தங்களுக்கு நல்ல ஸத்கர்மங்களை நாடிச் செய்துகொள்ளுபவர் ஆவார்கள். இது எப்படி நேரிடக்கூடுமென்றால், பூர்வகர்மங்கள் தலைசாய்ந்தால், பகவானை அணுகவொட்டாதே தடுக்கும் பாவங்கள் தொலையும். அவனுக்கு மனம்போல் உங்களுக்கு உகப்பான கைங்கரியங்களைச் செய்யலாம்.

குறிப்பு:—ஆழ்வார் இப்பாசுரத்தில், மஹா மந்திரமாகிய திருவஷ்டாக்ஷரத்தின் நடுவு கண்டத்தைத் துணையாகக்கொண்டு ஸ்ரீநிவாஸப்பெருமானை அடையுங்கோள், நீங்கள் இந்தச் சுமையை எடுத்துச்சென்றால் உங்கள் பக்திகளைச் சுகரமாய் ஏற்க அவன் சுமைதலை எடுத்துக்கொள்வான், என்று கற்பிக்கிறார். பக்தி யோகத்தைத் துடங்கினால், தற்காலம் பலம் கொடுத்துக்கொண்டிருக்கின்ற "பிராப்தகர்மாவைத்" தவிர மற்ற பூர்வகர்மங்கள் பக்தனைத் தொடாது என்பது பகவத்கீதையின் துணிவு.

#### 7-ம் பாசுரம்.

சுமந்து மாமலர் நீர்சுடர் தூபங்கொண்
டமர்ந்து வானவர் வானவர் கோனொடு
நமன்றெ ழூந்திரு வேங்கட நங்கட்குச்
சமன்கொள் வீடு தருந்தட குன்றமே.

அவதாரிகை:-"வேங்கடேசாய நமம, ஸ்ரீநிவாஸாய நமம" என்று பகுத்தறிவோடு உச்சரிக்க ஆராய்ச்சி வேண்டும்; தத்துவங்களின் துணிவு வேண்டும். இவையில்லாதார் என்செய்வது என்றதற்கு இப்பாசுரத்தில், திருவேங்கடமுடையானை நிர்ப்பந்திக்க வேண்டாம், அவன் மலையே உங்கள் கோரிக்கையாகிற கைங்கரியத்தைக் கொடுக்கவல்லது, என்கிறார்.

பதக்குறிப்பு:—"நமன்று"-நம என்னும் ஆரியபதத்தின் வினைச்சொல் - நமஸ்காரம் செய்து.

பொழிப்புரை:—"பகவத் கைங்கரியம் வெகு முக்கியமென்று அதையே அபேக்ஷிக்கும் நம் பக்கல் நாம் அதற்குத் தக்கவரோ அல்லவர்களோ என்று குண நிரூ

பணம் செய்து நாம் தகுந்தவரல்லரென்று தவிர வொட்டாமல் நிர்ஹேதுகமாகத் திருமலை தானே அயர்வற்றவமரர்களுக்குத் தன்னைக் கொடுத்தாப்போலே திருவேங்கடமுடையான் திருவடிகளிலே அவர்கள் செய்யும் சேஷ விருத்தியெல்லாம் நமக்கும் ஸமமாகத் தந்தருளுமென்கிறார்"—ஆறுயிரப்படி.

8-ம் பாசுரம்.

குன்ற மேந்திக் குளிர்மழை காத்தவன்
அன்று ஞால மளந்த பிரான்பரன்
சென்று சேர்திரு வேங்கட மாமலை
யொன்று மேதொழ நம்வினை யோயுமே.

பொழிப்புரை:—"நிரதிசய போக்கியபூதனை வெம்பெருமானுக்குங்கூடப் பரமபிராப்பியமான திருமலை தான் மற்றொரு பிரயோஜனத்தைத் தரவேணுமோ? ஆதலால் திருமலை தன்னையே அனுபவிக்க நம்முடைய கிலேசமெல்லாம் போமென்கிறார்"—ஆறுயிரப்படி.

குறிப்பு:—மாமலை—பகவானே தேடிவந்து நித்திய வாஸம் பண்ணும் ஸ்தலமாகையால் மஹத்தான மலை என்கிறார்.

9-ம் பாசுரம்.

ஓயு மூப்புப் பிறப்பிறப் புப்பிணி
வீயு மாறு செய்வான் திருவேங்கடத்
தாய னுண்மல ராமடித் தாமரை
வாயுள்ளும் மனத்துள்ளும் வைப்பார் கட்கே.

உரை:—அப்போது மலர்ந்த பூப்போலுள்ள ஸ்ரீ பாதங்களாகிற தாமரைகளை வாயாலே எப்போதும் துதிசெய்து இடையீடின்றித் தியாநம்செய்கின்றவர்கட்கு, தேஹ பலத்தைக் குறைக்கும் வயதானுண்டாகும் மூப்பு என்ன பிறப்பு மரணம் வியாதிகள் என்ன இவை எல்லாவற்றையும் திருவேங்கடத்து ஆயன் ஸ்ரீ கிருஷ்ணபகவான் நசிக்கும்படி செய்வான்.

விசேஷக் குறிப்பு:—சென்ற பாசுரத்தில் திருமலையை அநுபவிப்பவர்களுக்கு எல்லா வருத்தங்களும் போமென்றார். அடுத்த 10-ம் பாசுரத்தில் "வேங்கடத்து மொய்பூந் தடந்தாழ் வரையை" ஆயுளும் தேகபலமும் குறைவதின் முன்னர் அடையுங்கோள் என்றுகற்பிக்கின்றார். நடுவில் இப்பாட்டு, திருவேங்கடமுடையான் மூப்புஇறப்புஜந்மங்கள் இதுகளைத் தவிர்த்துத் தருவானென்கிறது. சந்தர்ப்பத்துக்கு எப்படி இதுபொருந்துமென்றால், திருமலை தன்னையே அடுத்தவர்க்கு "திருவேங்கடத்து ஆயன்" என்று பட்டம்சூடினவன் தன் திவ்யக்ஷேத்திரத்திற்குக் குணக்கேடு வாராத நிமித்தம் அம்மலையை ஆச்ரயித்தவருக்கு மேல்படி பலம் கொடுப்பானென்பது ஆழ்வார் திருவுள்ளமாகக் கொள்ளவேண்டும். திருமலையை ஆச்ரயிக்கும்பொருட்டு வற்புறுத்துவதற்கு இப்படி உரைத்தார்.

10-ம் பாசுரம்.

வைத்த நாள்வரை யெல்லை குறுகிச்சென்
றெய்த்தி ளைப்பதன் முன்ன மடைமினோ
பைத்த பாம்பணை யான்திரு வேங்கட
மொய்த்த சோலைமொய் பூந்தடந் தாழ்வரே.

உரை:—உங்கள் ஆயுள் குறுகி இளைப்புத் துடங்கு முன்னர்ப் பூஞ்சோலைகளடர்ந்த திருவேங்கடத் தாழ்வரையைச் சென்றடையுங்கோள்.

குறிப்பு:—தாழ்வர் "தாழ்வரை" என்பதின் திரிபு அல்லது பிரதிரூபம்.

11-ம் பாசுரம்.

தாள்ப ரப்பிமண் தாவிய ஈசனை
நீள்பொ ழில்குரு கூர்ச்சட கோபன்சொல்
கேழி லாயிரத்திப் பத்தும் வல்லவர்
வாழ்வர் வாழ்வெய்தி ஞாலம் புகழவே.

"ஸர்வாத்மாக்களுக்கும் கண்டு அநுபவிக்கலாம்படி திருவடிகளைப் பரப்பி இந்த லோகத்தை யளந்தருளின திருவேங்கடமுடையானைச் சொன்ன இத் திருவாய்மொழியைப் படித்தவர் லோகமெல்லாம் புகழும்படி எல்லாவற்றிலும் மேற்பட்ட 'திருமலை' யாகிற மஹாசம்பத்தைப்பெற்று வாழ்வார் என்கிறார்" ஆறுயிரப்படி.

## தமிழ்ப் பாடம் 28.

### நள வெண்பா—கலிதொடர் காண்டம்

[525-வது பக்கத் தொடர்ச்சி]

இனி நீர்விளையாட்டை வருணிக்கின்ற செய்யுள்கள் சில வருகின்றன.

கொங்கை முகத்தணையக் கூட்டிக் கொடுங்கையா
லங்கணைக்க வாய்நெகிழ்ந்த வாம்பற்பூக்—கொங்க [விழ்தேன்
வார்கின்ற கூந்தன் முகத்தை மதியென்று
பார்க்கின்ற தென்னலாம் பார். 9.

பதப்பிரிவு:—கொங்கை முகத்து அணைய கூட்டி கொடும்கையால் அங்கு அணைக்க வாய்நெகிழ்ந்த ஆம்பல் பூ கொங்கு அவிழ் தேன் வார்கின்ற கூந்தல் முகத்தை மதி என்று பார்க்கின்றது என்னலாம் பார்.

அன்வயம்:—ஆம்பல் பூ......முகத்தை......பார்க்கின்றது, என்று சேர்த்துக்கொள்க.

பதவுரை.

கொங்கை - (ஒருத்தி) தன் முலையின்
முகத்து - நுனியில்
அணைய - நெருங்க
கூட்டி - சேர்த்து
கொடும்கையால் - (தன்) உள்ளங்கையால்
அணைக்க - அணைப்பதால்
வாய்நெகிழ்ந்த - மலர்ந்த
ஆம்பல் பூ - ஆம்பல் மலரானது,
கொங்கு - வாசனை
அவிழ் - வீசுகின்ற
தேன் - தேன்
வார்க்கின்ற - ஒழுகுகின்ற
கூந்தல் - கூந்தலுடைய
முகத்தை - (அவளது) முகத்தை
மதி என்று - சந்திரனே வென்று
பார்க்கின்றது - பார்க்கின்றதைப்போல் இருக்கிறது

என்னலாம் - என்று நாம் சொல்லலாம்,
பார் - (தமயந்தியே இக்காட்சியை) நீ பார்
(என்றான் நளன்)

விரிவுரை:—சந்திரனது வரவால் மலர்ந்து உவகையோடு இனிது நோக்கும் ஆம்பல்மலர், அப்பொழுது பகலாயிருந்ததால் குவிந்திருந்தது. அதைப் பறித்து ஒருத்தி மிக்க ஆசையோடு தன் மார்பில் அணைத்துக் கொண்டாள். கொள்ளவே இதழ் நெகிழ்ந்து அது மலர்வது இயற்கை. இதற்கு வேறு ஓர் காரணங் கூறுகின்றார் கவி. கூந்தல் குலவிய அவள் முகத்தைச் சந்திரன் என மதித்து ஆம்பல் அலர்ந்துவிட்டது என்பர். ஆதலால் இது உளபுல வேதுத் தற்குறிப்பேற்ற வணி ஆயிற்று. இன்னும், முகத்தை மதியென்று ஆம்பல் மயங்கியதால் இதனில் மயக்கஅணியும் கலந்திருக்கின்றது. ஒன்றற்குள் ஒன்றாகப் பல அணிகள் பாட்டில் கலந்து வருகின்ற வழக்கமுண்டு. அது பாட்டினது அழகைப் பின்னுஞ் சிறக்கச்செய்யும்.

ஆம்பல் நீரில் விளையும் மலராதலால் மாதர் குளத்திலிறங்கிச் செய்கின்ற செயலை இச்செய்யுள் குறித்தல் வேண்டும். ஆதலால் நீர்விளையாட்டைச் சேர்ந்ததென்றுசொன்னேம். அடுத்தசெய்யுளும் குவளையைக் கொண்டிருப்பதால் நீர்விளையாட்டே.

குறிப்பு:—இச்செய்யுளில் வருகின்ற அங்குஎன்பது அசைச்சொல்; பொருளில்லை.

---

கொய்த குவளை கிழித்துக் குறுநுதன்மே
லெய்தத் தனிவைத்த வேந்திழையாள்—வையத்தா
ருண்ணாக் கடுவிடத்தை யுண்ட வொருமூன்று
கண்ணனைப் போன்றனளே காண். 10.

பதவுரை.

கொய்த - பறித்த
குவளை - குவளைமலரினது இதழை
கிழித்து - கிழித்து (தன்)
குறு - சிறிய
நுதல்மேல் - நெற்றியின்மேல்
எய்த - பொருந்த
தனி - ஒன்றாக
வைத்த - ஒட்டிக்கொண்ட
ஏந்து - உயர்ந்த
இழையாள் - ஆபரணங்களை அணிந்த ஒருத்தி,
வையத்தார் - எவ்வுலகத்தி லிருப்பவரும்
உண்ணா - உண்ணமுடியாத
கடு - கொடிய
விடத்தை - விஷத்தை
உண்ட - உண்ட
ஒரு - ஒப்பற்ற [சிவபிரானை
மூன்று கண்ணனை - மூன்று கண்களையுடைய
போன்றனளே - போன்றிருக்கின்றாள்,
காண் - நீ பார்.

விரிவுரை:—குவளைமலர் கண்ணிற்கு உவமை. நெற்றியிலொன்று அதனை இவள் ஒட்டிக்கொண்டபோது மூன்றுகண்கள் உடையவள்போல் தோன்றினாள். ஆதலால் இவளைச் சிவபிரான் என்று கூறலாம். (திருப்பாற்கடல் கடைந்தகாலத்து வந்த விஷத்தைப் பரமசிவன் அருந்தியதை யாவரும் அறிவர்)

குறிப்பு:—(1) உண்ணாக் கடுவிடம், என்பதிலுள்ள உண்ணாஎன்பது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். உண்ணாத, என்றிருத்தல் வேண்டும் அதன் ஈறாகிய த கெட்டுவிட்டது.

(2) ஒரு, என்னும்சொல் சில சமயங்களில் ஒன்று என்னும் எண்ணைக் குறிக்காமல், ஒப்பற்ற (unique) என்ற பொருளை உணர்த்திவரும். தனி என்றசொல் லுக்கும்இந்தப்பொருள் இருக்கின்றது. தயரதன் தனி மைந்தன், தயரதன் ஒரு மைந்தன், என வருவது இந்தப்பொருளில் அந்தச்சொற்கள்பயில்வதற்குஉதாரணம். இச்செய்யுளில் 'ஒருமூன்று கண்ணன்' என்ற இடத்தில் ஒரு எனபதற்கு ஒப்பற்ற - சிறந்த, என்று பொருள்.

(3) ஆபரணங்களை அணிந்தவள் என்று பெண்களைக்குறிப்பது செய்யுள்வழக்கம். இனி, இந்தஇழை-ஆபரணம், அடைமொழிகள் பெற்று, ஆய் இழையாள் - தேர்ந்தெடுத்த ஆபரணங்களை யணிந்தவள், நேர் இழையாள் - நேரான ஆபரணங்களை யணிந்தவள், தெரி இழையாள் - தெரிந்தெடுத்த ஆபரணங்களை அணிந்தவள், ஒளி இழையாள் - பிரகாசம் பொருந்திய ஆபரணங்களை யணிந்தவள், என வரும். இந்தச் செய்யுளில்ஏந்திழையாள் என்பதும்அப்படிப்பட்டதொன்று. ஏந்திய ஆபரணங்களை யுடையவள் - தாங்கிய அல்லது உயர்ந்த ஆபரணங்களை அணிந்தவள் என்று பொருள்கொள்ளவேண்டும்.

---

கொழுநன் கொழுந்தாரை நீர்வீசக் கூசிச்
செழுமுகத்தைத் தாமரைக்கே சேர்த்தாள்—கெழு [மியவக்
கோமகற்குத் தானினைந்த குற்றங்க ளத்தனையும்
பூமகட்குச் சொல்லுவாள் போல். 11.

பதப்பிரிவு:—கொழுநன் கொழும் தாரை நீர் வீச கூசி செழு முகத்தை தாமரைக்கே சேர்த்தாள் கெழுமிய அ கோ மகற்கு தான் நினைந்த குற்றங்கள் அத்தனையும் பூ மகட்கு சொல்லுவாள் போல்.

அன்வயம்:—கொழுநன் கொழுந்தாரை நீர் வீசக் கூசி, கெழுமிய அக்கோமகற்குத் தான் நினைந்த குற்றங்கள் அத்தனையும் பூமகளுக்குச் சொல்லுவாள்போல் செழுமுகத்தைத் தாமரைக்கே சேர்த்தாள்.

பதவுரை.

கொழுநன் - (ஒருத்தியினுடைய) நாயகன்
கொழும் - கொழுத்த
தாரை - தாரையாக
நீர் - நீரை எடுத்து
வீச - (அவள் மீது) வீசுவதனால்
கூசி - (அவள்) கூச்சம் கொண்டு,
கெழுமிய - (அன்பு) நிறைந்த
அ - அந்த
கோ - சிறந்த
மகற்கு - புருடன்மீது
தான் - அவள்
நினைந்த - எண்ணியிருந்த
குற்றங்கள் - பிழைகள்
அத்தனையும் - அவ்வளவும்
பூ மகளுக்கு - இலக்குமியினிடத்தில்
சொல்லுவாள்போல் - (இரகசியமாகச்) சொல்பவளைப் போல் (தன்)
செழு - வளப்பம் வாய்ந்த

முகத்தை - முகத்தை
தாமரைக்கு - தாமரையினுள்
சேர்த்தாள் - சேர்த்து மறைத்துக்கொண்டாள்.

விரிவுரை :—பொழில்விளையாட்டை வருணித்த போது, முதலில் மாதர்கள்மாத்திரம் தனியாய்ப் பூப் பறிப்பதை வருணித்து (2, 3, 4, 5-வது செய்யுள் கள்)பிறகு நாயகனும் நாயகியும் சேர்ந்து (6வது செய் யுள் விளையாடியதைச் சொன்னதுபோலவே, நீர்வி ளையாட்டிலும், 9, 10 செய்யுள்களில் மாதர்களைத் த னியாகவும், 11 வது செய்யுளில் நாயகனோடு சேர்த் தும் கூறுகின்றார் கவி.12-வது செய்யுள், மாதர்மாத்தி ரம் விளையாடுவது. 13-வது செய்யுளில் காதலர் இரு வரும் வருகின்றனர். 14, 15, 16-வது செய்யுள்களில் மாதர்மாத்திரம்.

குளத்தில் ஒருவர்மேல் ஒருவர் நீரை எறிந்து விளை யாடுவதைக் கூறுகின்றது இச்செய்யுள். நாயகன் மிகு ந்த நீரை எடுத்தெடுத்து நாயகியின் முகத்தில் வீச வே அவள் தாங்கமாட்டாமல் ஒரு தாமரைமலரிற்குள் தன் முகத்தை வைத்து மறைத்துக்கொள்கின்றாள். தாமரையில் இருக்கின்றாள் திருமகள். அத்திருமக ளோடு இவள் தன் செய்தியைச் சொல்வதுபோன்று இருக்கின்றது. அவள் கூறிய செய்தி என்ன என்ப தை இரண்டுவிதமாகக் கொள்ளலாம். ஒன்று"இவன் எனக்குச் செய்கின்ற குற்றம், இந் நீர் எறிவதுபோ ன்ற பலஉள. அவைகளை எல்லாம் நான் நினைத்திருக் கின்றேனே யன்றி மறக்கவில்லை.இன்னும் இதுபோல் எத்தனை எத்தனையோ,சொல்கின்றேன் கேள்' என்று அவள் தன் அன்னையோடு சொல்வதுபோல் திருமக ளிடத்தில் சொன்னாள்போலும்.அல்லது, "இவ்வளவு அன்புவாய்ந்த இவனிடத்தே நான் பலதரம் ஊடல் கொண்டு அவன் மனம் வருந்தும்படி செய்துள குற் றங்களைச் சொல்கின்றேன் கேள்" என்று கழிவிரக்க ங்கொண்டு தன் தோழியோடு சொல்வதுபோல் திரும களோடு சொன்னாள் என்பது மற்ற அர்த்தம். இவ்வி ரண்டு அர்த்தத்திற்கும் "கோமகற்குத் தான் நினைந்த குற்றங்கள் அத்தனையும்" என்னும் சொற்கள் இடம் கொடுக்கின்றன. முதலாவது பொருளில், 'குற்றம்' என்பது அவன் இவளுக்குச் செய்த குற்றம்; இரண் டாவது பொருளில் இவள் அவனுக்குச் செய்த குற் றம்.

---

பொய்தற் கமலத்தின் போதிரண்டைக் காதிரண்டிற்
பெய்து முகமூன்று பெற்றாள்போ—லெய்த
வருவாளைப் பாரென்றான் மாற்றுரை வென்று
செருவாளைப் பார்த்துவக்குஞ் சேய். 12.

கருத்து:—ஒருத்தி தன் ஒவ்வொரு காதிலும் ஒவ் வோர் தாமரைப்பூவைச் செருகிக்கொண்டு வர "மூன் று முகம் பெற்றவள்போன்ற இவளைப் பார்" என்று நளன் தமயந்திக்குக் காட்டினான்.

---

பொன்னுடைய வாசப் பொகுட்டு மலரலையத்
தன்னுடனே மூழ்கித் தனித்தெழுந்த-மின்னுடைய
பூணு டிருமுகத்தைப் புண்டரிக மென்றயிர்த்துக்
காணா தயர்வானைக் காண். 13.

பதப்பிரிவு:—பொன் உடைய வாசம் பொகுட்டு மலர் அலைய தன் உடனே மூழ்கி தனித்து எழுந்த மின் உடைய பூணாள் திரு முகத்தை புண்டரிகம் என்று அயிர்த்து காணாது அயர்வானை காண்.

பதவுரை.

பொன்உடைய - மகரந்தத்தின்
வாசம் - வாசனையையுடைய
பொகுட்டு - நீர்க்குமிழியும்
மலர் - மலர்களும்
அலைய - அசையும்படி
தன்னுடனே - நாயகனுடனே (சேர்ந்து)
மூழ்கி - நீரிற்குள் முழுகி
தனித்து - (நாயகனுக்குமுன்பு) தனியாக
எழுந்த - (நீரிற்குமேல்) நிமிர்ந்த
மின்உடைய-பிரகாசம் பொருந்திய
பூணாள் - ஆபரணங்களை அணிந்தவளது
திரு-அழகிய
முகத்தை-வதனத்தை
புண்டரிகம் - தாமரை
என்று - என்று
அயிர்த்து - அநுமானித்ததால்
காணாது - தன் நாயகியைக் காணுமல்
அயர்வானை - தளர்கின்றவனை
காண் - நீ பார்.

விளக்கம்:—காண் - பார். யாரைக் காண்? அயர் வானைக் காண் - தளர்கின்றவனைப் பார். எப்படி அயர் வானை? காணாது அயர்வானை? பார்க்காமல் தளர்ப வனை. என்னகாரணத்தால் காணாது அயர்வானைக் காண் என்கின்றான்? அயிர்த்து - அநுமானித்ததால், என்னவென்று அயிர்த்து? புண்டரிகம் என்று அயிர் த்து - தாமரை என்று அநுமானித்து. எதைப் புண் டரிகம் என்று அயிர்த்து? முகத்தை. எப்படிப்பட்ட முகத்தை? திருமுகத்தை - அழகிய முகத்தை. யாரு டையை முகத்தை? பூணாள் திருமுகத்தை-ஆபரணங் களையணிந்த தன் நாயகியினுடைய அழகிய முகத்தை. எப்படிப்பட்ட பூணாள்? மின் உடைய பூணாள்-பிரகா சம் பொருந்திய ஆபரணங்களை யணிந்தவள். எந்த மி ன்னுடைய பூணாள் திருமுகத்தைப் புண்டரிகம் என் று அயிர்த்துக் காணாது அயர்வானைக் காண்? எழுந்த மின்னுடைய பூணாள் திருமுகத்தை - எழுந்தவளாகிய பிரகாசம்பொருந்திய ஆபணரங்க ளணிந்தவளுடைய அழகியமுகத்தை. எப்படி எழுந்த? தனித்து எழுந்த- முதலில் தனியாக எழுந்த. என்னசெய்து தனித்தெ ழுந்தவள் அவள்? மூழ்கி. யாருடனே மூழ்கி? தன் னுடனே - (நாயகனாகிய) தன்னுடனே. எப்படி மூழ் கினர்? அலைய - அலையும்படி. எது அலைய? மலர் அலைய? இன்னும் எது அலைய? பொகுட்டு-சேற்றுக் குமிழி. மலரும்குமிழியும் எப்படிப்பட்டவை? பொன் னும்வாசமும் உடையவை-மகரந்தப்பொடியும் வாசனை யும் உடையவை.

விரிவுரை:—இதுநாயகனும், நாயகியமாகச் சேர்ந்து நீரிலே விளையாடுகின்ற விளையாட்டின் ஒரு காட்சியை வருணிப்பது. தாமரைக் குளமொன்றில் இருவரும் இறங்கினர். அப்பொழுது, "நாமிருவரும் ஒரே சமயத் தில் நீரிற்குள் முழுகி யாரே வெகுநேரம் மூச்சுப்பிடிக் கக் கூடும் என்று பார்ப்போம். முதலில் எழுந்தவர் தோற்றார்" என்று நிபந்தனை செய்துகொண்டு 'ஒன்று இரண்டு மூன்று' என்றுசொல்லி ஒருங்கேமுழுகினர். இப்படிக்கதும் என முழுகுவதால் அக்குளத்தில் இரு ந்த மலர்களும் எழுந்த குமிழியும் அலைந்தன.இதையே கவி, "பொன்னுடைய வாசப் பொகுட்டு மலரலைய

தன்னுடனே மூழ்கி,'' என்றவரையிற் சொல்கின்றார். ஆனால் நாயகி ஒரு தந்திரம் செய்தாள். நீரிற்குள் இருவரும் முழுகியவுடன் இவள்மாத்திரம் நீருள்ளே இருந்து அவத்தைப்படாமல் தலையைநிமிர்ந்து கழுத்தளவு குளத்துளிருக்க நின்றுவிட்டாள். அவள் தனித்தெழுந்த விதம் இது. பந்தயம் வெல்லுதற்குப் பாடுபடும் நாயகன் தன்னாலியன்றஅளவு நீரிற்குள் தடுமாறிப் பின் பொறுக்கமுடியாமல் எழுந்தான். முகத்தை வெளியே வைத்திருக்கின்றாளாயினும் அவன் மனைவியைக் காணவில்லை. ஏனெனில் அவள்முகமும் தாமரைபோடு தாமரையாகக் கலந்துபோயிற்று. இவன் கண்ணில் அம்முகம் தென்பட்டபோது தாமரையென்றே அதனை மயங்கி, இன்னும்அவள் நீரினுள்ளேயே இருந்தனள் எனஎண்ணித் தானே தோற்றுவிட்டதாக முதலில் மதித்தான். சிறிது நேரமாயது. இத்தனை நேரம் யாவராலும் நீரிற்குள் மூச்சை அடக்கி இருக்கமுடியாதாதலால் அவளுக்கு என்னநேர்ந்ததோ, எனக் கலக்கங்கொண்டு தளர்ந்து வருந்தினன். இவ்வளவும் பார்த்துக்கொண்டே அவன்மனைவி தனக்குள் சிரித்திருப்பாள். இக்காட்சியை நளன் தமயந்திக்குக் காட்டினன்.

குறிப்பு:-முகத்தை முகமென்று அறியாமல் தாமரையென்று மயங்கியதால் இது மயக்க வணி.

# பெனிடிக்ட் டி ஸ்பைனோஸா

[526-வது பக்கத் தொடர்ச்சி]

சங்கங்கள் மூலமாகத்தான் தன்னறிவு சுரக்கும், அறவாழ்க்கையின் தன்மை புலனாகிப் பலமுற்றுப்பிரகாசிக்கும்.

ஒவ்வொருவனும் தன் அயலார்களுடன் நிர்மல மனத்துடன் பழகித் தவறுபவர்களைச் சாந்தவழியால் திருத்தி, அறிவிலிகளையும் தீயர்களையும் உதைத்து மிதிக்காமல் அறிவுரை புகட்டி உயர்த்திவருவனாயின், சமாதானமும், இன்பமும், தயாளத்வமும், ஞானமும், அறமும் நாலாபக்கங்களிலும் நிலவி நிற்கும். இவ்வாறு செய்தலும் செய்யத் தூண்டுதலும் ஞானியின் பெருங் கடமைகளாகின்றன.

பொச்சாப்பும், துவேஷமும் கைதவமும் இன்னுமிவைபோன்ற ஏனைய தீமைகளும், அன்பினாலும் பொறையினாலும் தயாளத்வத்தினாலுமே வெல்லப் படுவனவன்றி ஆயுதங்களாலல்ல.

மானுடரனைவரும், ஒரே மனிதன்போல், மனமிசைந்து ஒற்றுமையுடன் வாழவேண்டும்; மாந்தர்க்குள் ஒற்றுமையைப்பெருக்கிப் பலப்படுத்துபவைகளை ஒவ்வொருவனும் பற்றவேண்டும்.

மானுடச் சுவபாவம் சதாகாலமும் மாறிப் பற்பல குணாதிசயங்களுடன் தோன்றுவதால் மனப்பதற்றமுறாமல், பிறருடைய குற்றங் குறைகளையும் நிந்தைமொழிகளையும் க்ஷமித்து, பிறரை அலப்புறுத்தும் பிரேமைகளுட்படாமல் விவேகத்தினால் தன் வழியையும் கடமையையும் அறிந்து, அவைகளை ஏகாக்ர சித்தத்துடன் செய்துமுடிப்பவன் தீரபுருஷனாவான்.

சுய சுகஜீவனத்திற்கும், தன்னலத்திற்குமே ஒவ்வொருவனும்உழைத்து வருவதால், இடையில், சிலர்க்குச் சிறிது கஷ்ட நஷ்டங்கள் உண்டாகலாம்; எனினும், சமுதாய வாழ்க்கையை மாத்திரம் கைவிடாமலிருப்பின், இறுதியில், அனைவர்க்கும் நன்மை உண்டாகுமேயல்லாமல் ஒருபொழுதும் தீமை விளையாது. ஆதலின், பிறர் இழைக்கும் தீங்குகளையும், தவறுதல்களையும்பொறுத்து மன்னித்து மறந்து, ஒற்றுமையையும் நட்பையுமே பரப்பி ஸ்தாபிக்கவேண்டும்

நீதி நேர்மை வாய்மை உள்ளன்புகளின் பலன் ஒற்றுமையாகும்.

உருவத் தோற்றங்களிலும், வெளிப்பகட்டு மினுக்குக்களிலும்,மாறியழியும் பொருள்களிலும் மனதைச் செலுத்தி மங்குபவன் நாளடைவில் வெறுப்பினால் பீடிக்கப்படுவான்.

கேவலம் போகப்பிரியத்தினால் கவரப்படாமல்,நல்ல மக்களைப் பெற்று, அவர்களுக்கான கல்வியளித்து இனிது இல்லறம் நடத்தவேண்டுமென்ற எண்ணமுடன் மணந்து இல்லறவாழ்க்கையிற் புகுதல் சிறந்ததாகும்.

பேரின்பத்திற்கு உற்ற துணையாவது பணக்குவியலன்று.

உலகமோ அனந்தம்; உலகாதிகளோ எண்ணிறந்தன; மானுடச்சக்தியோ மிக்க அற்பமானது; எவ்வளவு அறிவு நிரம்பப்பெற்றிருப்பினும்உலகனைத்தையும் ஒருவனாலும் அறிதற்கியலாது; உலகாதிகளனைத்திற்கும் தக்கவாறு நடத்தற்கியலாது. ஆதலால், ஒவ்வொருவனும் சுயசக்தியை உணர்ந்து இயலாதவைகளில் தலையிட்டு உழலாமலும், எதிர்பார்த்த முறைப்படி உலகாதிகள் நடவாதபொழுது கோபமுறாமலும், எதிர்பாராதவைகள் தோன்றின் வியப்புற்றுக் கலங்கி வருந்தாமலும், ஒவ்வொன்றும் அவ்வதன் உள்ளமைப்புக்கானவிதம் இயங்குகின்றதென அறிந்து சாந்தமுற்றிருக்கவேண்டும்.

* * *

அரசநீதியைப்பற்றி ஸ்பைனோஸா கருதியகொள்கைகளிற்சிலவற்றைச் சுருக்கமாக இனி அறிவிப்போம்.

இயற்கை விதியை யொட்டியவரையிலும் ஒவ்வொன்றும் சுகித்து நீடித்து நிலைத்து வாழ்வதற்கான உரிமையும் சக்தியும்பெற்று விளங்குகின்றதெனவும், ஒவ்வொரு ஜீவனும் சுபவளர்ச்சிக்கு அநுகூலமானவைகளை நல்லனவெனவும், பிரதிகூலமானவைகளைத் தீயனவெனவும் கொண்டும் விடுத்தும் வருகின்றன எனவும்,நன்மை தீமைகளாகிய குணங்களில்லாமலும் உயர்வுதாழ்வுகளென்றவரம்புகளில்லாமலும் எப்பொழுதும் எப்பாகத்திலும் ஒருதன்மையனவாய் முறையுடன் உலகாதிகள் இயங்குகின்றனவெனவும், அறிஞன் மௌட்டியன், ஞானி உன்மத்தன், சுசீலன் துச்சன் முதலாயினவர்களுக்குள் யாதொரு பேதமுமில்லையெனவும், தெள்ளிய அறிவுவழிபற்றி வாழ்தற்கானஉரிமையும் சக்தியுமுடையவனாகி ஞானிவிளங்குதல்போல், ஆசாபாசங்களால் அலைக்கப்பட்டுத் தத்தளித்தற்கான சக்தியுரிமைகளுடன் மூடன் விளங்குகின்றானெனவும், கோளரியின் குண நடத்தைகளைப் பூனை பின்பற்றி நடக்காததால் ஒன்றை மேம்படுத்தி மற்றதைத் தாழ்த்திக்கூறுவது மதிக்குறைவெனவும், இவையெல்லாம் இயற்கைத் தர்மங்களெனவும் முன் கூறியுள்ளோம்.

# அப்பர்

## அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[529-வது பக்கத் தொடர்ச்சி]

(iv) வாயு:—இது துவக்கிந்திரியம் பிரமாணமாயுடையது. பிராணன் காற்று முதலிய பேதமுடையது. பரிசம், சங்கியை, பரிமாணம், பிரதக்துவம், சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், வேகம் * என்னும் ஒன்பது குணங்களுடையது. பரிசத்தால் அனுமானிக்கப்படுவது. இதுவும் நித்திய அநித்திய பேதங்களா லிருவகை. நித்தியம் பரமாணுரூபம்; அநித்தியம் காரியரூபவாயு. வாயுவுக்கு உருவம் அல்லது நிறம் யாதுமில்லை. அனுபவிக்கப்படும் பரிசத்திற்கு ஆசிரயம் யாது, அதுவே வாயுவென்றறிதற்பாலது. வாயு பிரத்தியட்சப் பொருளன்று. இதன் சரீரம் வாயு லோகத்திலுள்ளது. இதன் இந்திரியம் துவக்காகும். மரம் முதலியன அசைதற் கேதுவாயுள்ளது மகா வாயு.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே

என்னும் பாசுரத்தை நோக்குக. பிரத்தியட்சப்பொருளாயின்றி அநுமானத்தால் அறியக்கூடிய தென்றல் பிரத்தியட்சத்தில் இன்பம் பயப்பது காண்க. காற்று எங்கும் கலந்து † வதியக்கூடியதோர் பொருள். ஆதலால் அதனால் விளையும் இன்பம் ஏனைய பூதங்களால் விளையுமின்பதிற் சிறந்ததாகும்.

(v) ஆகாயம் (Ether) இது சத்தகுணமுடையது. மற்றும் இதற்கு, சங்கியை, பரிமாணம், பிரதக்துவம் சையோகம், விபாகமென்னும் ஐந்து குணங்களும் உண்டென்பர். ஆயினும் இது ஏகம், விபு, நித்தியம். ஆகாயத்திற்குச் சத்தம் லிங்கமாகும். சத்தம் சுரோத்திரேந்திரியத்தால் கிரஹிக்கப்படும்.

ஆகாயம் பரமமகத் பரிமாணமுடையது. எவ்விடத்தும் காரியம் தோன்றுதலின், அது நித்தியம். அது மற்ற பூதங்களோடு ஏககாலத்தில் அவை காணப்படுமிடத்திலும் காணப்படும்.

கடலகம் ஏழி னோடும் புவனமுங் கலந்த விண்ணும்
உடலகத் துயிரும் பாரும் ஒள்ளழ லாகி நின்று
தடமலர்க் கந்த மாலை தண்மதி பகலு மாகி
மடலவிழ் கொன்றை சூடி மன்னுமாப் பாடி யாரே.

திருஆப்பாடி - திருநேரிசை 1.

மகத்பரிமாணம் நால்வகை மேற்கூறிய அண்ட சராசரபரம மகத்பரிமாணமென்பது மிகவும் பெரிய அளவுடையது. அதற்குத் தாழ்ந்தது அபகிருஷ்ட மகத்பரிமாணம், கடம் முதலியவற்றில் காணப்படும். அதனினுந்தாழ்ந்தது அபகிருஷ்ட தரமகத்பரிமாணமெனப்படும்; கடுகு முதலிய சிறுபொருள்களில் காணப்படுவது. அதனினும் தாழ்ந்தது, திரியணுகத்தில் காணப்படுவது அபகிருஷ்டதம மகத்பரிமாணமெனப்படும். இவ்வஸ்துக்களை யொருவாறு காட்டுவதுபோல், அப்பர், சிவபெருமானை

விண்ணினார் விண்ணின் மிக்கார்
வேதங்கள் நான்கு மங்கம்
பண்ணினார் பண்ணின் மிக்க
பாடலார் பாவந் தீர்க்குங்
கண்ணினார் கண்ணின் மிக்க
நுதலினார் காமற் காய்ந்த
எண்ணினா ரெண்ணின் மிக்கா
ரிடைமரு திடங்கொண் டாரே.

திருவிடைமருது - திருநேரிசை 4.

எனப் பாடுவார்.

(vi) காலம்:—இது திக்கின் வேறான பரத்துவா பரத்துவத்தால் (முன்மை பின்மைகளால்) அநுமேயம். இதன் குணம் ஐந்தென்பர்—சங்கியை, பரிமாணம், பிரதக்துவம், சையோகம், விபாகம் என்பன. இது ஏகமாயும் நித்தியமாயுமுள்ள விபு ஆயினும், நிகழ்வு இறப்பு எதிர்வு வினையுபாதி வசத்தால், நிகழ்வு முதலிய அப்பெயர்களை யடையும். (உபாதியென்பது ஜாதி குணம் கர்மங்களின் வேறாயதோர் தர்மம், அல்லது தன்மை) மனிதன் அடுதல் முதலிய வினையுபாதியால் மடையன் முதலிய பெயரை யடைவதுபோல், காலமும் வினையுபாதியால் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலமென்னும் பெயர்கள் பெறும்.

கால மான கழிவதன் முன்னமே
ஏலு மாறு வணங்கிநின் றேத்துமின்
மாலு மாமல ரானொடு மாமறை
நாலும் வல்லவர் கோனிடம் நல்லமே

திருநல்லம் - திருக்குறுந்தொகை 9.

என்னும் அப்பர்பாசுரம் நோக்குக.

ஒரு பொருளின் அழிவோடுகூடிய காலம் * இறந்தகாலம்; அப்பொருளின் முன்னின்மை, பின்னின்மைகளைத் தழுவாதகாலம் அதற்கு நிகழ்காலம்; அப்பொருளின் முன்னின்மையோடு கூடியகாலம் அதற்கு எதிர்காலம் எனப்படும். காலாதீத லட்சணத்தை அப்பர் விளக்குவது காண்க:—

காலமு நாள்க ளூழி படையாமு னேக
வுருவாகி மூவ ருருவில்
சாலவு மாகி மிக்க சமயங்க ளாறி
னுருவாகி நின்ற தழலோன்

---

* காற்றி னுங்கடி தாகிந டப்பதோர்
ஏற்றி னும்மிசைந் தேறுவ ரென்பொடு
நீற்றி னையணி வார்சினை வார்தமைப்
போற்றி யென்பவர்க் கன்பர்புத் தூரரே.
திருவரிசிற்கரைப் புத்தூர் - திருக்குறுந்தொகை.

† வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே யாளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி யுள்ளே யொளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி யங்கே யமர்ந்தாய் போற்றி
ஆறங்க நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலைமலை யானே போற்றி போற்றி.
ஸ்ரீ கைலாயம் போற்றித் திருத்தாண்டகம் - 1.

* பண்டொர் நாளிகழ் வான்பழித் தக்கனார்
கொண்ட வேள்விக் குமண்டை யதுகெடத்
தண்ட மாவிதா தாவின தலைகொண்ட
செண்டர் போல்திரு நாகேச் சரவரே.
திருநாகேச்சரம் - திருக்குறுந்தொகை 5.

ஞாலமும் மேலை விண்ணொ டுலகேழு முண்டு
குறளாயொ ராலி னிலைமேல்
பாலனு மாய வற்கோர் பரமாய மூர்த்தி
யவனு நமக்கோர் சரணே.
தசபுராணம் - பண் - பழம் பஞ்சுரம் 3.

(vii) திக்கு:—இது ஒன்று; நித்தியம்; விபு; இதற்குள்ள குணங்கள் ஐந்து. அவையாவன, சங்கியை, பரிமாணம், பிரதக்துவம், சையோகம், விபாகம் என்பன. இதுவும்பரத்துவாபரத்துவ ‡ஞானங்களா லனுமேயமாம். பரத்துவாபரத்திற்கு வேறுகாரணமின்மையால், முன்னும் பின்னும் பொருள் ஆண்டேயிருத்தலால், திக்கு என்பதின் விவகாரம் நிகழும். இது அவ்வத் தேச சூரியனுடைய சையோக உபாதிவசத்தால், கிழக்கு முதலிய பெயர்களையடையினும், இது உண்மையில் ஒன்றே $

இது காலம்போல் வியவகார கற்பனையால் ஏற்பட்டது. ஆராய்ச்சியில் இதைப் பொருளெனக்கொள்ளல் முறையன்று.

எத்திக்கு மாய்நின்ற விறைவன் றன்னை
யேகம்பம் மேயானை யில்லாத் தெய்வம்
பொத்தித்தம் மயிர்பறிக்குஞ் சமணர் பொய்யிற்
புக்கழுந்தி வீழாமே போத வாங்கிப்
பத்திக்கே வழிகாட்டிப் பாவந் தீர்த்துப்
பண்டைவினைப் பயமான வெல்லாம் போக்கித்
தித்தித்தென் மனத்துள்ளே யூறுந் தேனைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டே னானே.
திருச்செங்காட்டங்குடி - திருத்தாண்டகம் 7.

என்னும் அப்பர்பாசுரத்தையும், தாயுமானார் திருவாய் மலர்ந்தருளிய,

"தென்முகத்தின் முகமாயிருந்த
நாலு வெம்முகத்தினும் வணங்குவேனைத்
தெரிவதற்கரிய பிரமமே யமல
சிற்சுகோதய விலாசமே"

என்னும் செய்யுளையும் நோக்குக.

(viii) ஆன்மா:—இது சுகதுக்க முதலிய வேறுபாட்டால் பல. அதற்கு, சங்கியை முதலியஐந்துப் சாமானிய குணங்கள்; புத்தி முதலிய ஒன்பது விசேட குணங்கள். இதற்குநித்தியத்துவம், விபுத்துவமுண்டு.

இதைச் சைவத்தில் பசுவென்பர் - பாசத்தில் கட்டுண்டபோது துன்பத்தின் அநுபவமுண்டு. பாசம் நீங்கிப் பதியைச் சார்ந்தகாலை, பதி வேறு தான்வே றின்றி என்றும் அழிவற்ற இன்பத்திலாழும். இதன் தத்துவத்தை அப்பர் பற்பல பாசுரங்களில், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்குகின்றார்:—

சுழித்துணையாம் பிறவிவழி துக்க நீக்குஞ்
சுருள்சடையெம் பெருமானே தூய தெண்ணீர்
இழிப்பரிய பசுபாசப் பிறப்பை நீக்கும்
என்றுணையே யென்னுடைய பெம்மான் றம்மான்
பழிப்பரிய திருமாலு மயனுங் காணாப்
பரிதிமிய சுருதிமுடிக் கணியாய் வாய்த்த
வழித்துணையாம் மழபாடி வயிரத் தூணே
யென்றென்றே யானரற்றி நைகின் றேனே.
திருமழபாடி - திருத்தாண்டகம் 7.

முத்தி யாக வொருதவஞ் செய்திலை
சுத்தி யாலடி யார்க்கொன் றளித்திலை
தொத்து நின் றவர் சோற்றுத் துறையர்க்கே
பத்தி யாய்ப்பணி செய்மட நெஞ்சமே.
திருச்சோற்றுத்துறை-திருக்குறுந்தொகை 2.

நில்லாக் குரம்பை நிலையாக்
கருதியிந் நீணிலத்தொன்
றல்லாக் குழிவீழ்ந் தயர்வுறு
வேனைவந் தாண்டுகொண்டாய்
வில்லேர் புருவத் துமையாள்
கணவா விடிற்கெடுவேன்
செல்வா திருச்சத்தி முற்றத்
துறையுஞ் சிவக்கொழுந்தே
திருச்சத்திமுற்றம் - திருவிருத்தம் 4.

(ix) மனம்:—இது அணுப்பிரமாணம்-ஆத்ம சையோகி உள்ளிந்திரியம். இன்பமுதலிய சாக்ஷாத்காரத்திற்குக் காரணம். இது நித்தம் சங்கியை முதலிய ஐந்து குணமுடையது. அவையாவன, சங்கியை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம் என்பன. இதற்குப் பரத்துவம், அபரத்துவம், வேகம் இம்மூன்று முண்டு.

மனமெனுந் தோணி பற்றி
மதியெனுங் கோலை யூன்றிச்
சினமெனுஞ் சரக்கை யேற்றிச்
செறிகட லோடும் போது
மதனெனும் பாறை தாக்கி
மறியும்போ தறிய வொண்ணா
துனையுனு முணர்வு நல்கா
யொற்றியூ ருடைய கோவே.
திருவொற்றியூர் - திருநேரிசை 2.

மனத்திற்கிலக்கணம் சுகம் முதலிய அநுபவத்திற்குக் காரணமாகுதல். அது பரிசமின்றிச் செயலுடையது. அது உயிர்தோறும் நியதமாயிருத்தலின் பலவாய் அணுரூபமாய் நித்தியமாய் இருக்கும்.

ஆத்மா மன சையோகத்தால் ஆத்மாவின் மானதப் பிரத்தியட்சமுண்டாகின்றது. மனம் விபுவன்று. அது அணுப்பிரமாணமாய் வதியும். ஏனெனில், மனம் விபுவென்னில் ஆத்மாவோடு சையோகமுண்டாகாத லென்பது பொருந்தாது. அம்மனமானது பரிசுத்தமாகுங் காலத்துவிபுத்தன்மைபெறும். அப்போதுநனவிற்சுழுத்திநிலையாய் ஆன்மா உறக்கமின்றி அகண்டாகாரமாய் விளங்கும். இது ஞானிகள் நிலையேயன்றி, சாதாரண மானிடத்தன்மையில் காணக்கூடியதன்று. சாதாரணமாய்ச்சுழுமுனைநாடியில் மனமொடுங்கியகாலத்து ஆத்மா உறங்கலும், ஒடுங்காதகாலத்தில் அஃதின்மையும் நேருமாதலின் மனம் அணுவெனப்படும். அதன் தன்மையை

பொன்னுள் ளத்திரள் புன்சடை யின்புறம்
மின்னுள் ளத்திரள் வெண்பிறை யாயிறை
நின்னுள் ளத்தருள் கொண்டிரு ணீக்குதல்
என்னுள் ளத்துள தெந்தை பிரானிரே.
மனத்தொகை - திருக்குறுந்தொகை.

என்னும் அப்பர் பதிகத்தா லறிக.

‡ பரத்துவம் - தூரத்தன்மை. அபரத்துவம் - சமீபத்தன்மை.

$ எட்டாந்திசைக்கு மிருதிசைக் கும்மிறை வாமுறையென்
றிட்டா ரமரர்வெம் பூச லெனக்கேட் டெரிவிழியா
ஒட்டாக் கயவர் திரிபுர மூன்றையு மோரம்பினால்
அட்டா னடிநிழற் கீழதன் றேவென்ற னாருயிரே.
ஆருயிர்த் திருவிருத்தம் 1.

# எல்லாம் வீணோ?

## ஒரு சிறு ஈரங்க நாடகம்

[531-வது பக்கத் தொடர்ச்சி]

நாராய:—எதற்காக மாமா, ஒன்று கேட்டால் ஒன்பது சொல்கிறீர்கள்!

சீனுவா:—இப்பொழுதுதான் பூர்வகதை முடிந்திருக்கிறப்போல் தோன்றுகிறது. இதற்கே பொறுக்காமற்போனால்!

[வெங்கடேசன் வருகிறான்]

வெங்க:—இலை போட்டாச்சு, லைபோட்டாச்சு, போட்டாச்சு, ட்டாச்சு, டாச்சு, ச்சு, சு,

கோதண்:—என்ன உளறலடா இது! மரியாதை தெரியவில்லை?

வெங்க:—சாப்பிட வாருங்கள், ப்பிடவாருங்கள், பிடவாருங்கள், டவாருங்கள்.........

கோதண்:—சரிதான், உள்ளே போடா!

வெங்க:—கொஞ்சம் மன்னிக்கவேண்டும். இரண்டு மூன்று கலியாணம் முடியவேண்டும் போலிருக்கே. இத்தனையும் முடித்துக்கொண்டு சாப்பிட வருகிறதானால், என்ன சுவாமி, எனக்குப் பசிக்காதா பாருங்கள். சாப்பாட்டுக்கடை யானதும் குசாலாய், சாலாய், லாய்,...

கோதண்:—அடெ மடையா, என்ன பண்ணிவிடுகிறேன் பார், இப்போ! சி! உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போ!

வெங்க:—சுவாமி, இத்தனை கோபம் வேண்டாம். நான் பதினைந்து வருஷம் ஜட்ஜ் அனந்தராம ஐயர் வீட்டில் வேலைசெய்தேன். இருபத்தோரு வருஷம் இஞ்சினீர் சோமசுந்தரய்யர் வீட்டில் இருந்தேன். பத்து வருஷம் சிவகங்கை ஐயர்வாள் வீட்டிலிருந்தேன். இன்னும் வந்து.......

சீனு:—இன்னுமா! இவனுக்கு வயதே முப்பது முப்பத்தைந்து இராது. நாற்பத்தேழு வருஷத்திற்குக் கணக்குச் சொல்லிவிட்டு இன்னும் ஆரம்பிக்கின்றானே.

நாரா:—(ஒருபுறமாய்) அப்பா! நீ சத்திபசந்தன்! உன் ஒழுங்குதான் வழியிலேயே தெரிந்துவிட்டதே. ஏதேது! வேலைக்காரனிட்ட பிச்சைபோல் இருக்கிறது உன் பொய். வீட்டிற்கு ஒருவன் போதாதா அரிச்சந்திரன்.

சீனு:—ஏன், முன்னெல்லாம் யுத்தத்தின் மரணக்கணக்குப் பத்திரிகையில் போட்டிருந்தார்களே; அதைப்பார்த்து இவ் வெள்ளைப்பொய் இவனும் பிடித்துக்கொண்டான் போலிருக்கிறது.

வெங்க:—சுவாமி, வாமி, மி--என்னை இப்படி எல்லாம் வையவேண்டாம்.

கோதண்:—சரி, இதைவிட்டுப் போடா. நீ ஜன்ம ஜன்மமாய்ப் பரிசாரகப் பயல்தானே! நீ இப்படி எல்லாம் 'இது' பண்ணிக்கொண்டிருந்தால் எப்படியாகும். சீ! சீ! என்னை என்ன முழுமூடன் என்று எண்ணிக்கொண்டாயா?

வெங்க:—காலையில்தானே சுவாமி வந்து வேலைக்கு அமர்ந்தேன். இதற்குள் கேட்டால், ட்டால், டால், ல். (போகிறான்)

கோதண்:—ஓகோ! சரிதான். அவசரப்பட்டுத் தன் அபிப்பிராயத்தைக் கொடுக்க இஷ்டமில்லையோ! ரொம்ப சரியடா. நாம்சாப்பிடப் போகலாம்வாருங்கள். இந்த வேலைக்காரர்களுடன் படுகிறபாடு போதும். (வெங்கடேசன் தன் துணிமூட்டையைத் தூக்கிக்கொண்டு வருகிறான்) என்னடாதிது!

வெங்க:—சுவாமி, உத்தரவு கொடுங்கள். நான் இத்தனை வருஷகாலம் எத்தனையோ பேர் வீட்டில் எப்படி எப்படியோ இருந்திருக்கிறேன். என்னை ஒருவனும் 'அட' என்றதில்லை!

சக்ர:—அப்பாடா, போகட்டும். இதற்கெல்லாம் கோபித்துக்கொண்டால் எப்படி! என்னைப் பார்த்தாவது இரு பார்ப்போம் நீ.

வெங்க:—இவாளுக்கெல்லாம் நன்றி இல்லை போங்கள். நான் எங்கே போனாலும் அங்கே அதிர்ஷ்டம் கூடவே வரும். இதோ பாருங்கள். காலையில் தான் பிள்ளைக்குக் கலியாணமாகிறவழியைக் காணோமே, அந்தப் பணத்தை வாங்கித்தான் பெண்ணுக்கு வழி பிறக்கவேண்டும், என்று அம்மா விசாரப்பட்டுக்கொண்டிருந்தாள். இதோ, நீங்கள் பிள்ளைக்குப்பெண்ணும், பெண்ணுக்குக்கையோடே பிள்ளையும் கொண்டுவந்து நிற்கிறீர்கள்-நான் வந்த அதிர்ஷ்டம், அது இவர்களுக்குத்தெரியவில்லை. நான் போகிறேன். இதெல்லாம் எனக்கு எப்படித் தெரியுமென்று கேட்கிறீர்களோ; நான்தான் அவர்கள் பேசும்போது கதவுமூலையில்ஒட்டுக்கேட்டுக்கொண்டிருந்தேனே. வேணுமென்றால் அம்மாவைக்கூப்பிட்டுக்கேளுங்கள்—நீங்கள் இப்பொ வருவீர்களென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தாப் போலிருக்கிறது. அதற்குத்தான் நீங்கள் வந்ததும் சம்மந்திக்குச் சாவேஇல்லை என்றார்கள். நான் பொய்சொன்னால் அம்மாவைக் கூப்பிட்டுக் கேளுங்கள்-அம்மா, ஓ அம்மா......

சீனு:—போதும் எங்கள் மானத்தைக் காக்கவந்த குலதெய்வம் நீ. நல்ல வேளையில் நீ போய்ச் சேர். ரூபிக்கவேண்டாம்.

வெங்க:—சொன்னாலும் போகத்தான் போகிறேன், சொல்லாமற் போனாலும் போகத்தான் போகிறேன். நான் உங்களைஎல்லாம் பார்த்து வரவில்லையே! என்னவோ அம்மாவைப் பார்த்தாக்கும்! (சக்ரபாணி ஐயரைப்பார்த்து) உங்களுக்கன்னா—பட்டணத்தில் உங்களாத்தில் ஆள் இருக்கிறானா?

சக்ர—இல்லை, ஏன், நீ வரலாமென்றா!?

நாராய:—இருக்கிறான் இருக்கிறான். இரண்டு பேர். வேணுமென்றால் எழுதுகிறேன், அப்பொழுது நீ வரலாம்!

வெங்க:—சரி! எனக்குக் கையில் முப்பதினாயிரம் ரூபாயில்லாமல் மூந்நூறு ரூபாய் வட்டி நஷ்டம். பாருங்கள். நூற்றுமுக்கால் ஏழரை, பைத்தேழுபது, பைத்தரை......

கோதண்:—அடே, இந்த நிமிஷம் வெளியில் போகிறாயா! கழுத்தைப் பிடித்துத் தள்ளச்சொல்லட்டுமா!

வெங்க:—இதோ போய்விட்டேன்! கோபம் என்னத்

திற்கு. என்வேலை ஆய்விட்டது! (போகிருன்)

நாராய:—(ஒருபுறமாய்) ஆமாம்! உன்வேலை முழுவதும் ஆய்விட்டது. போ!

கோதண்:—ஆறு மாதத்திற்குள் பன்னிரண்டு பரிசாரகன் வந்துவிட்டுப் போய்விட்டான் போங்கள்-என்னவோ. ஸ்நாநத்தைப் பண்ணிவிட்டுச் சாப்பிடலாம் வாருங்கள்.

சக்ர:-உங்கள் ஸம்ஸாரத்திற்கு ரொம்ப சிரமம் ஸார்.

(நாராயணன் தவிர மற்றெல்லாரும் போகிருர்கள்)

நாராய:—இரகசியம்தான் எப்படியும் வெளிபாய்விடுமே!நாம் எதன்மூலமாய் வெளியாய் விடலாமென்று பயந்திருந்தோமோ அதன்மூலமாயாகாதிருக்கலாம். ஆனல் திடீரென்று உடைந்துவிடும். இப்பரிசாரகன் வெங்கடேசன் தன்வேலைபாய்விட்டது இனிப் போகிறேன் என்று சொல்லிப்போனுன். உண்மையானவார்த்தை. கோதண்டராமஐயர் சம்சாரசுகுஷ்மங்கள் முக்கியமாய் யாருக்குத் தெரியக்கூடாவோ அவர்களுக்கே காட்டிக்கொடுப்பதற்குத்தான் மூன்றமணிநேரம் இவ்வீட்டில் தோன்றி மறைந்தானே? இப்பெண் விசாலத்தின்மீது என்மனம் என்னவோ நாடுகின்றதே. அவளை நான் மணத்தல் வேண்டும். அதற்கு, திருடர்கள் மாதிரி இருபேர் வகிக்கும் சீனுவாசமூர்த்தி அல்லது எ. பி. சிவராமகிருஷ்ணனே கருவியாயிருப்பான். இரு இரு, நாராயணு, இப்பொழுது இச் சமையற்காரன் வேலையை விட்டுப்போனதை நீ உன் பிரயோஜனத்திற்குட்படுத்தக் கூடாதா?

(போகிருன்)

# ஷெல்லி

[536-வது பக்கத் தொடர்ச்சி]

அந்தரங்கமான வேளையில் தனது காதல்மிகுந்த ஆன்மாவை, ஒரு அரண்மனைக் கோபுரத்திலிருந்து தன் பூங்காவன முழுவதும் வியாபிக்குமாறு அன்பேயனைய இனிமைவாய்ந்த இசைகொண்டு ஆற்றுவிக்கும் ஓர் உயர்குல நங்கையைப்போலவும், பனித்துளிகள் உள்ள ஓரிடத்தில் பொன்னிறமான ஒரு மின்மினிப் பூச்சி தனது அழகிய வர்ணங்களைப் பிரதியாவண்ணம் கண்களுக்குப் புலப்படாத இடமாகிய மலர்களினிடையும், புற்களினிடையும் தெளித்துக்கொண்டிருப்பதைப்போலவும்,பசிய ரோஜா இலைகளில், மறைந்துள்ள ஒரு ரோஜாமலர் உஷ்ணமான காற்றுக்களால், அசைக்கப்பட்டு இதழ்கள் அதனது பரிமளம் பலதிசைகளிலும் பரவவும் அடர்ந்த சிறகுகள் உள்ள இப்பறவைகளுக்கு நறுமணம் ஊட்டிக் களைப்புறும்படி செய்கின்றது. இளவேனிற்காலத்தில் பெய்யும் மழை ஒளிர்கின்ற புற்களின்மேலிறங்க அம்மலர்கள் மழைத்துளிகள் விழுதலால், உறக்கத்தினின்றும் எழுகின்றன. உனது கீதம் சந்தோஷமாயும் தெளிவாயும் இனிமையாயும் மேலானதாயு மிருக்கின்றது. நீ தெய்வீக சக்திபாயிருந்தாலும் சரி, அல்லது ஒரு பறவையாயிருந்தாலும் சரி, உனது இனிய எண்ணங்கள் யாவையோ என்பதை எங்களுக்குக் கற்பிக்கக் கடவாய். காதலைப் பற்றியாயினும், பசுசாறுந் தேறலைப்பற்றியாயினும் இசைமொழி செய்தள்ள எதுவும் தெய்வீக இன்னோன்ன இனிய, சங்கீதமழை பொழிவதை நான் ஒருபொழுதுங் கேட்டதில்லை. தோத்திரம் ததும்பிய கீதமாயினும், வெற்றியுடன் திரும்பும் வீரனைப் பாராட்டியளிக்கும வாழ்த்தாயினும் உனது இனிய கீதத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது எல்லாம் வெறும் பேச்சாய்விடும். துதிப் பாக்களிலும், வாழ்த்துக்களிலும் ஒரு மறைந்துள்ள தேவையை நாம் உணருகின்றோம. உனது கீதப்பெருக்குச் சுரக்குமிடந்தான் எந்நிலமோ, எவ்வலையோ, எம்மலையோ? எவ்வித உருவு கொண்ட ஆகாயமோ, பெருவெளியோ? உன்இனத்தினிடை நீவைத்துள்ள எவ்வகைக் கேண்மையோ? துன்பத்தைப்பற்றிய உன் அறியாமைக் குணந்தான் என்ன? உனது தெளிவான இனிய இன்பத்துடன் தளர்வு இருக்கமுடியாது.கவலையுடைய உணர்ச்சியின் சாயலாவது உன்னருகில் எப்போதும் வந்தது கிடையாது. நீ காதலிக்கிறுய்; ஆனல் காதலின் துன்பமான தெவிட்டலை நீ எப்போதும் அறிந்ததில்லை. விழித்துள்ளபோதாவது, தூங்கியிருக்கும்போதாவது, மரணத்தைக் குறித்து நீ உண்மையும் ஆழ்ந்ததுமான கருத்துக்களைப்பற்றி நினைத்திருக்க வேண்டும். இறக்குந்தன்மையுடைய நாங்கள்காணும் கனவுகளுக்கு அவை மேலானவை; அப்படியில்லாவிடில் உனது கீதங்கள் தெளிய ஆற்றருவியைப்போல் எப்படிப் பாய முடியும்? நாம் முனனும் பின்னும் பார்க்கிறோம், இல்லாதவைகளைக் குறித்து விசனிக்கிறோம். எமது மனப்பூர்வமான சிரிப்பு ஏதோ சிறிது துன்பத்தினுடன் கலந்துள்ளது; எமது இனிமை மிகுந்த பாடல்கள் எவை எனில், துக்ககரமான கருத்துக்களைத் தெரிவிப்பதேயாகும். ஆனல், நாங்கள், பகை கர்வம் பயம் இவைகளை வெறுக்கக்கூடுமாயினும் கண்ணீர்த்துளிஒன்றேனும்சிந்தாதிருக்கப் பிறந்திருப்போமாயினும், உனது சந்தோஷநிலைக்கு எப்போதாவது நாம் ஏறக்குறைய வரமுடியுமா என்று எனக்குத் தெரியாது. எல்லா இன்னோசைகளின் அளவுகளையும் புத்தகங்களிற் கிடைக்கும் எல்லாப் பொக்கிஷங்களையும்விட உனது திறமை கடந்திருக்கின்றது. ஓ! பூமியை வெறுக்கும் பறவையே, உனது அறிவிற்கு எட்டியுள்ள சந்தோஷத்தில் பாதியளவாவது எனக்கு நீ கற்பிப்பாயானல் ஒற்றுமையோடு ஒலிக்கும் இன்னிசை எனது உதடுகளிலிருந்து வழியும். அப்போது, நான் எவ்வாறு உனது கீதத்தைக் கேட்கிறேனே அவ்வாறு உலகம் எனது கீதத்தைக் கேட்கும்.

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்—6. கரன் வதைப் படலம்.

[518-வது பக்கத் தொடர்ச்சி]

மேல்லப்போர் செய்த விதம்.

என்னினைத்தோ எம்பெருமான் இராகவன் நிருதர் தொகுதியைத் தானே தனியாய்ப் பொருதழிக்க மனங்கொண்டனன். தம்பியைத் தன் இன்னுயிர்ச் சீதைக்குக் காவற்றுணைவைத்து, அம்புப்புட்டில் கட்டி வில்லேந்தித் தோளிற்கவசமுமிட்டுவாள்விசித்துப்போர்க்கோலம் பூண்டனனாய்ப் புறம்போந்த கமலக்கண்ணனைக் குருதிபாய் மூக்கினளவ் வரக்கி கரன்முதல் அரக்கர் தலைவர்களுக்குக் குறித்துக்காட்டுதலும், "ஊனுடை இவனை யானே உண்குவென் உயிரை" என்று அவ்வரக்கன் கனன்று கூறுமுன்னம், மேகங்கள் குருதிமழை சொரிந்தன, அவன் கொடிமிசைக் காக்கையின் கணங்கள் பொருது வீழ்ந்தன, வாளின் வெட்டுவாய்களை ஈக்கள் வளைக்கின்றன, வீரர்களது தோள்களும் கண்களும் இடப்பக்கந் துடிக்கின்றன, போர்ப்பரிகள் நின்றநிலையில் தூங்கி விழுகின்றன, நாயும் நரிகளுங் கூடி ஊளையிடுகின்றன, பூமாலைகள் எல்லாம் புலால்முடை வீசுகின்றன. தீயநிமித்தங்கள் இவைகளின் பொருளுணர்ந்த அகம்பன் கரனுக்கருகு சார்ந்து, "மானிடனொருவ னென்றிவனை நாம் வெல்லும்வகை யொல்லோம்" என்னத் தடுத்தானாலும், கரனோ அதனைக் கேளாமல், "தேவரைத் தேய அரைத்த அம்மியாம் என் எழில்தோள்கள் மனிதனொருவனுக்கு இளைக்குமோ" என இகழ்ந்து அரக்கர் படைகளை ஏவி, தனிநின்ற இராகவனை வளைத்தனன். இராமன்கை வரிவில்லும் வளைந்தது. இந் நிலையிற்றான் புராணிகரொருவர்,

> சதுர்தச ஸஹஸ்ராணி ரக்ஷஸாம் பீமகர்மணாம்
> ஏகச்ச ராமோ தர்மாத்மா கதம்யுத்தம் பவிஷ்யதி

என்ற சுலோகத்தைப் படிக்கக் கேட்டலும், அடியார்தம் தூய்மைக்கு அரவுக்குடத்தில் தன் கரங்களை இட்டுச் சான்றுகாட்டிய அக் குலசேகரப்பெருமாள் பக்திப்பெருக்கினால் காவியமென்றும் காட்சிக்குரிய கருமமென்றும் ஒருந்திறமற்று, பதினாலாயிரம் நிருதரிடைத் தனித்துநின்ற இராமனுக்குப் படைத்துணை பிற்றைநாள் திரட்டி வரலானார். வாழ்க எம் சேரர் பெருமான், வழிவழி சிறக்க அவர் வாழ்ந்த வளநாடு. இவ்வள்ளல் ஒருநாள் இருந்ததன்பொருட்டு என்றும் தீதிலதாகுக இவ்வையகம்.

காவியத்தில் இராமனுக்கு வந்ததுணை யொன்றும் அன்று அப்போர்க்களத்தில் வந்ததில்லை. எனினும், அவன்கை வரிவில் வளையாமுன்னம், அரக்கர் கரங்களுஞ் சிரங்களுங் குன்றெனக் குவிய மீண்டுமவர் குருதிவெள்ளமே அம்மலைகளைக் கரைத்தன. அன்றியும்,

> காடு கொண்டகா ருலவைகள் கதமெரி கதுவச்
> சூடு கொண்டன வெனத்தொடர் குருதிமீத் தோன்ற
> வாடு கின்றன வறுகுறை யயிலம்பு விண்மே
> லோடு கின்றன வுயிரையுந் தொடர்வன வொத்த

[வனத்தின்கண் அடர்ந்துள்ள பெரிய மரக்கிளைகள் மூள்கின்ற நெருப்புப்பற்றி எரிவனபோல, தலையற்ற உடற்குறைகள் வழிகின்ற இரத்தம் மேல் தோன்ற துடிக்கின்றன. விண்ணில் விரைந்து ஓடுகின்றனவாகிய கூரிய இராமபாணங்கள், அரக்கர்களது உடலை அழித்தது போதாமல் அவர் உயிர்களையும் தொடர்ந்து செல்வன போன்றன]

தையலார் நெடு விழியெனக் கொடியனவாகிய இராகவன் சரங்கள் உயிரைத் தொடர்வது ஓர் விந்தையோ. ஆயினும் அஞ்சியோடிய அவ்வுயிர்களின் வேகம் கரியசெம்மலின் சுடுசரங்களின் கடிய வேகத்தினும் அதிகமாயிருந்திருத்தல் வேண்டும். ஏனெனில் பாணம் படுவதன்முன் அவ்வுயிர்கள்தாம் விண்ணுலகம் புக்கொளித்தன என்பதைக் கம்பர்,

> கவந்த பந்தங்கள் களித்தன குளித்தகைம் மலைகள்
> சிவந்து பாய்ந்தவெங் குருதியிற் றிருகிய சினத்தா
> னிவந்த வெந்தொழி னிருதர்த நெடுநிணந் தெவிட்டி
> உவந்த வன்கழு துயிர்சுமந் துளுக்கிய தும்பர்

[கவந்தங்கள் கூத்தாடின; யானைகள் சிவந்து பாய்ந்த வெப்பமுடைய இரத்தத்தில் முழுகின; மூண்ட கோபம் மிக்க கொடுந்தொழில் புரியும் அரக்கர்களின் கொழுப்பைத்தின்று தெவிட்டிப் பேய்களும் மகிழ்ந்தன; தேவலோகம், தன்பால் வந்தடைந்த அரக்கருயிர்களின் பாரத்தைத் தாங்கமாட்டாமல் உடல் நெளித்தது.]

எனத் திறம்படத் தெரிவிக்கின்றனர். அத்துணை வலியராய நிருதர் ஒருகணத்தில் இவ்வண்ணம் அழிந்தொழிதல் ஆகுமோ; மற்று எத்துணை விறலுடைய மொய்ம்பினனேனும் ஒருவனுய் நின்ற இராமன் இவ்வழிவுசெய்ய ஒண்ணுமோ, என்னில், இதனில் விந்தை என்னுளது என்பார்போல் கம்பர்பிரான்,

> மருட ருங்களி வஞ்சனை வளையெயிற் றரக்கர்
> கருட னஞ்சுறு கண்மணி காகமுங் கவர்ந்த
> விருட ரும்புரத் திழுதையர் பழுதுறற் கெளிதே
> அருட ருந்திறத் தறனன்றி வலியதுண் டாமோ

[மருளச்செய்கின்ற களிப்பும் வஞ்சனையும் உள்ள, வளைந்த பற்களையுடைய அரக்கர்களது கருடனும் காண அஞ்சும்படியான கண்களின் கருவிழிகளை, இப்பொழுது காகங்களும் கவர்ந்து உண்டன. இருளையொத்த உடலையுடைய வஞ்சகர்கள் அழிவடைவது எளியதே! அருளுடைய தருமமே யல்லமால் வலிமையுடையது வேறு உளதோ!]

என்ன எடுத்துக்காட்டுஞ் செய்யுள், உய்யும்நெறியில் ஊக்கம்வைத்த எவராலும் எந்நாளும் மறக்கற்பாலதன்று.

இதுகாறும் தனித்தனியும் சிறுசிறு பகுதிபாகவும் வந்துவந்து இராமனை எதிர்த்துமாண்டனர் போலும் நிருதர். இதன் முடிவைக்கண்டனர் அவ்வஞ்சகர்மானுடனொருவனேனும் சிறுபோர் இவன்பாற் செல்லாதென்பதுணர்ந்து,

> பல்லாயிர மிருள்கீறிய பகலோனென வொளிரும்
> வில்லாளனை முனிபாவெயி லயிலாமென விழியாக்
> கல்லார்மழை கணமாமுகில் கடைநாள்விடு வனபோ
> லெல்லாமொரு தொடைபாவுட னெய்தார்வினை செய் [தார்

[பல ஆயிரம் இருள்களைப்பிளந்த ஒரு சூரியன்போல் விளங்குகின்ற வில்லாளனாகிய இராமனைக் கோபித்து, பிரகாசிக்கின்ற வேலாயுதம்போன்ற கூரிய தம் கண்களை

விழித்துநோக்கி, பெரிய மேகக்கூட்டங்கள் கற்பாந்த காலத்தில் கல்மழை சொரிவனபோல், அரக்கர்கள் எல்லாரும் ஒரே தொடர்ச்சியாக இராமன்மேல் அம்புகளை எய்து போர்த்தொழில் செய்தனர்]

படையொருங்கு இவ்வண்ணம் மேல்வருங்காலத்தும் இடம் சிறிதும் பெயர்ந்திலன் இராமன். பதறினனல்லன், வெகுண்டலைந்து ஆரவாரங்கள் செய்தானல்லன். வருத்தம் சிறிதுமின்றிப் புரியும் ஓர் விளையாட்டென்ன மெல்லவே தன்திறத்தில் எதிர்ப்போர் வழங்கலாயினன். வல்லெழுத்து அருகியும், மெல்லெழுத்தும் இடையெழுத்துமே மிகுந்தும் கனிச்சீர் மூன்றும் மாச்சீர் ஒன்றுமாய் அமைந்த அளவடிகளால் நடக்கும் பாக்களின் ஓசையே இராமன் விரைந்து முடுகுதலின்றி ஆர அமர்ந்து மெல்லவே செய்த போரின் தன்மையை நுண்ணிதின் காட்டுகின்றது:—

எறிந்தாரென வெய்தாரென
நினைந்தாரென வெறிப
வறிந்தாரென வறியாவகை
யயில்வாளியி னறுத்தான்
செறிந்தாரையும் பிறிந்தாரையுஞ்
செறுத்தாரையுஞ் சினத்தான்
மறித்தாரையும் வலித்தாரையு
மடித்தான்சிலை பிடித்தான்

[அடர்ந்து வந்தவர்களையும் அகலச்சென்றவர்களையும், கோபமுடன் வந்தவர்களையும், கோபமுடன் மறுபோர் புரியப் புகுந்தவர்களையும், வன்போர் செய்தவர்களையும், இன்னார் வேல்களை எறிந்தார் இன்னார் அம்புகளை எய்தார் இன்னார் எறிய நினைந்தவர் ஏறிய அறிந்தவர் என்றொன்றும் அறிய இயலாதபடி, வில்லைஏந்தினவனாகிய இராமன், தன் கூரிய அம்பினால் துணித்துக் கொன்றொழித்தான்]

அப்பொழுது,

வானத்தன கடலின்புற வலயத்தன மதிசூழ்
மீனத்தன மிளிர்குண்டல மிதுனத்தன மிடல்வெங்
கானத்தன மலையத்தன திசைசுற்றிய கரியின்
தானத்தன காகுத்தன சரமுந்திய சிரமே

[இராமனுடைய பாணங்களால் அறுத்துச் சொரியப்பட்ட அரக்கர்தலைகள், ஆகாயத்தில் சென்று சேர்ந்தவைகளும், கடலிற்கு வெளிப்புறத் தெல்லையிற் சென்று சேர்ந்தனவும், சந்திரனைச் சூழ்ந்த நக்ஷத்திர மண்டலத்தில் சென்று சேர்ந்தனவும், பிரகாசிக்கின்ற குண்டலங்கள் தரித்த மிதுன இராசியில் சென்று சேர்ந்தனவும், கொடிய வலிய காடுகளில் சென்று சேர்ந்தனவும், மலைகளிற் சென்று சேர்ந்தனவும் திசைகளில் உள்ளயானைகளிடத்தில் சென்று சேர்ந்தனவும் ஆயின]

இனி, இவ்வாறு சிரங்களை அறுத்தகன்ற சரங்களோ என்னில்,

மண்மேலன மலைமேலன மழைமேலன மதிதோய்
விண்மேலன நெடுவேலையின் மேல்கீழன மிடலோர்
புண்மேலன குருதிப்பொழி திரையாறுகள் பொங்
திண்மேருவை நகுமார்பினை யுருவித்திரி சரமே [கத்

[புண்பட்ட இடங்களில் பெருகின இரத்த வெள்ளமாகிய வீசுகிற அலைகளையுடைய நதிகள் பொங்கும்படி வலிமையுடைய அரக்கர்களது வலிய மேருமலையையும் தமக்கு ஈடாகாதென்று பரிகசிக்கின்ற மார்புகளைத்துளைத்து அப்பாற் சென்ற இராம பாணங்கள், தரையில் விழுந்தவைகளும், மலைகளின்மேல் விழுந்தவைகளும், மேகங்களின்மேல் விழுந்தவைகளும் சந்திரன் பொருந்திய ஆகாயத்தின்மேற் சென்றவைகளும், பெரிய கடலின் மேலே விழுந்தனவும் உள்ளே அமிழ்ந்தனவும் ஆயின.]

இதனிடையில்,

அழைத்தார்சில ரயர்ந்தார்சில
ரழிந்தார்சிலர் கழிந்தார்
உழைத்தார்சில ருயிர்த்தார்சிலர்
உருண்டார்சிலர் புரண்டார்
குழைத்தாழ்திரைக் குருதிக்கடல்
குளித்தார்சிலர் கொலைவாய்
மழைத்தாரைகள் படப்பாரிடை
மடிந்தார்சில ருடைந்தார்

ஊழியே வந்துற்றதென அழியுமிவ்வரக்கரைக் கண்ணுற்ற படைத்தலைவர்கள் பதினன்குபேரும், கடல் கடைந்தெழும் விடமென வந்து இராமனை வளைத்துச் செருவிளைத்தனர். இன்னவர் தம் சேனையோடு இராமனை எதிர்த்து,

எய்தார்பல ரெறிந்தார்பலர்
மழுவோச்சின ரெழுவாற்
பெய்தார்பலர் புடைத்தார்பலர்
கிடைத்தார்பலர் பொருப்பாப்
பெய்தார்மழை பிதிர்த்தாரெரி
பிறைவாளெயிற் றரக்கர்
வைதார்பலர் தெழித்தார்பலர்
மலையாமென வளைத்தார்

வளைத்தாலுமென், விளைவுதான் வேறுமோ! இராம பாணங்கள் எதிர்விளம்பினவுடன்,

மால்பொத்தின மறவோருடன்
மழைபொத்தின வழிசெம்
பால்பொத்தின நதியிற்கிளர்
படிபொத்தின படர்வான்
மேல்பொத்தின குழுவிண்ணவர்
விழிபொத்தினர் விரைவெங்
கால்பொத்தினர் நமன்றூதுவர்
கடிதுற்றியிர் கவர்வார்

[மயக்கம் நிறைந்த கொடிய அரக்கர்களின் உடம்பில் அம்புகள் மழைபோல் துளைத்தவழிகளிலே, இரத்தப்பெருக்கெடுத்து ஆறுகள்போல் போர்க்களத்தை மறைத்தது. பெரிய ஆகாயத்தை மறைத்திருந்த தேவர்கள் தம் கண்களைப் பொத்திக்கொண்டனர். வந்து வந்து அரகர்களுடைய உயிர்களைக்கவர்ந்துசெல்பவர்களாகிய எமதூதர்கள் விரைவினால் வலியுற்ற தம் கால்களைப் பிடித்துக்கொண்டனர்]

சுற்றுறநோக்கினர் படைத்தலைவர்; தலையறு யாக்கையை எங்கும் கண்டிலர். பொங்கியெழுங் கோபத்தால் பற்களை மென்று இராமன்பால் தம் தேரினை முடுக்கி வருதலும் இத்தனிவீரன் அவர் தேர்களைப் பரிகளோடும் பாகர்களோடும் சிதைத்து அவர் கையிருந்த விற்களையும் தனித்தனி பாணங்களால் உடைத்து வீழ்த்தினன். அவ்வரக்கர் தலைவர்களோ மலைகளைக் கொணர்ந்து விசும்பின் ஓங்கி எறிய மேவுதலும்,

கலைகளின் பெருங்கடல் கடந்த கல்வியா
னிலைகொள்வெம் பகழியே மிரண்டு வாங்கினன்
கொலைகொள்வெஞ் சிலையொடு புருவங் கோட்டினன்
மலைகளுந் தலைகளும் விழுந்த மண்ணினை

[கலைகளென்னும் கடலினைத்தாண்டிய கல்வியுடைய இராமன், இலைவடிவாயமைந்த பாணங்கள் பதினன்கு தன் புட்டிலினின்று எடுத்து, கொல்கின்ற கொடியதன் வில்லுடன் புருவங்களையும் வளைத்தான். அவ்வளவில் அம்மலைகளும் அவைகளை எறிந்த அரக்கர்களின் தலைகளும் மண்ணில் விழுந்தன]

வில்லுடன் புருவம் வளைந்த உடனிகழ்ச்சிக்கொக்க மலையுடன் தலைகளும் மண்ணில் விழுந்த அணியிது மிக்க அழகிதே.

# பொதிகை நிகண்டு

[533-வது பக்கத் தொடர்ச்சி]

கார்கூதிர் முன்பனிபின் பனியொடிள வேனிற்
கடுவேனி லாறுமா வணிமுதலீ ரிரண்டாய்ச்
சேராடி வரைசிரையாப் பெரும்பொழுதென் றாகுஞ்
சிறுபொழுது காலையுநன் பகலுடனெற் பாடு
மோர்மாலை யாமமும்வை கறையுமென வாறு
யுதித்ததற்து கடிகைமுத லொவ்வொருபத் தாகும்
கூர்மாதப் பிறப்புவிசுச் சங்க்ராந்தி யாகுங்
கோடைவே னிற்காலஞ் சரற்கால மழையே. (50)

மழைபரம்விண் கந்தமமை கொண்டன்மஞ்சு சீல
மால்விளைவு மூகில்கருவி சீமூதஞ் சீதம்
பொழிகனஞ்செல் வார்குயிற்கொண் மூத்தாரா தாரம்
புயன்மங்குல் சீமூகம்ப யோதரமம் புதங்கம்
எழிலியம்பு புகைவிசும்பு சலதரங்கார் மாரி
யிளைகுளிரி ககனம்விண்டப் பிரம்வான்கந் தரமை
யமைமேக நாற்பதென்றும் இடியொலிசென் மடங்க
லசனியுரு *மிகுளிவிண்ணே றனலேறு மிடியே. (51)

இடிசவலை தடிதடித்துச் சஞ்சலைமின் சம்பை
யிலங்குகன ருசிமின்னல் வித்துருவோ டொன்பான்
வடிதிவலை துளிதூவல் சொரிசிதறி தூறன்
மாரிபிதிர் வானஞ்சீ கரம்வருடம் பெயலே
†குடியுததி யாலிசிக ரந்தூற்றன் மழையாங்
கொடுஞ்சோனை பனித்தல்விடா மழையாமா சாரம்
நெடியமழை தலையல்மழை விடுதலிமந் துகினம்
நீகரமூன் றும்பனிபபேர் சிகமெனவு முறுமே. (52)

உறைதளிசீ கரந்தலையல் சிதர்தூவ லாலி
‡யுளிதிவலை துமிபெயல்பன் னொன்றுகுந் துளிப்பேர்
நிறைகனேறு பலமாலி யெனுமாலாங் கட்டி
§நீண்டிடுமிந் திரதனுவான் சிலைபச்சை வில்லா
மறைமுனிவர் கருடர்தயித் தியரியக்கர் சித்தர்
வானவர்கிம் புருடர்படர் கின்னரர்கந் தருப்பர்
பொறைநாக ருடுப்பேய்விஞ் சையர்மாக வாசர்
போகர்சா $தகரரக்கர் கணம்பதினெட் டுக்கே. (53)

முதலாவது தெய்வப்பெயர்த் தொகுதி
முற்றும்.

---

## இரண்டாவது
### மக்கட் பெயர்த் தொகுதி.

அடிகளிரு டிகள்பெரியோ ருறுவர்தவர் முனைவோ
ரறவர்தபோ தனர்துறவோர் முனிவர்வல்லோர் நீத்தோ
படிவரிலிங் கிகள்யோகர் புலன்வென்றோர் தடிந்தோர் [ர்
பண்ணவரந் தணர்முதியோர் பற்றில ரகாமர்
சடைமுடியோர் மாதவர்தா பதரறிஞர் தூயோர்
சார்பில்லோ ருயர்ந்தவர்மோ னிகளையர் மெய்யர்
ஓடிவில்கனி மூலசா காசனரெண் ணுன்கோ
டொன்றுமருந் தவர்நாமமென்றுசொல்லுந் தமிழே (54)

தமிழ்முனிவன் கும்பனுருத் திரசமனன் பொதிகா
சலன்பொருனைத் தலைவன்வா ருதியுண்டோன் குறியோ
அமர்விந்தம் பிலம்புகுத்தோன் லோபாமுத் திரைமன் [ன்
னரிமதநா சனன்வில்வ லாரியகத் தியன்பே
ருமிழ்சமியர் திகம்பரர்கா ளாமுகர்பா சுபதர்
யோகர்சைவ மால்சமைய முனிவர்பா கவதர்

* மிகுளம் விண்ணே (பி-ம்).
† குடியுதகி (பி-ம்.)
‡ யுளி (பி-ம)
§ நீண்டவான் சிலையிந்திர தனுப்பச்சை வில்லா (பி-ம்)
$ ரதரரக்கர் (பி-ம்.)

திமிரருகர் சாவகர்மா சீவர்புத்தர் சமணர்
தேரர்சா ரணர்பவுத்தர் சாக்கியர்சீ வரரே. (55)

வரமுனிவர் தொழுகுலத்தோர் மேற்குலத்தோ ருயர்ந்தோ
மறையோர்வே தியர்வேதர் முப்புரிநூன் மார்பர் [ர்
இருபிறப்போர் பூசுரர்நூ லோராதி வருண
ரெரிவளர்ப்போர் விப்பிரராய்ந் தோர்சடங்கர் பார்ப்பார்
விரியறவோர் மெய்யர்முத்தீச் செல்வரந்த ணாளர்
விந்தமா லையர்வேத பாரகர்வேள் வியினோர்
பெரியவரைய ரந்தணர் பிராமணர்*நா லேழும்
பேர்பிரம சாரிவன்னி யாமெனச்சொல் லனமே. (56)

அனக்கொடியுங் கமலமா லையுந் தரும முரசு
மந்தணர்க்கே யாமோத லோதுவித்தல் வேட்டல்
கனத்தின்வேட் பித்தலீ குதலேற்ற லாறங்
கருமமவர் தொழிலாகும் பாரத்து வாசி
தனுக்குரவன் கும்பசன்வே திக்கொடியோன் றுரோணு
சாரியன்பேர் பண்டிதர்நல் லோர்சான்று ரான்றோர்
விணிப்புலவ ருலகுமே தாவிதக்கோ ருயர்ந்தோர்
மிக்கோரா ரியர்விசா ரிதரறிஞர்க் கவையே. (57)

அவைகலைஞர் மேதையர்கற் றவர்கவிஞர் மூத்தோர்
அறிஞர்கவி நாவலர்பா வலர்புலவர் குருச்
சவைவிபுதர் விற்பனர்வித் துவான்முதுவோர் சாடுச்
சாருதிசங் கமுமவர்க்காங் குரவனிறை போதன்
பவமிலுர வோனடிக ளத்தனைய னுண்டோன்
பணிக்கனு சான்சாமி கோமானு பாத்தி
நவையில்பெரு மானதிசன் பதியீச னேச
னுதனு சிரியனு சாரியன்றே சிகனே. (58)

தேசபதி தோன்றல்கோ விறைகோன்மண் டலிகன்
செம்மல்விற லோன்சுகியன் குரிசின்மல்லன் கோமான்
ஈசனர பதிலோலன் கொற்றவன்பார்த் திபன்மன்
எந்தலாண் டகைதுரைபூ பாலனண்ணல் வேந்தன்
பேசரச னிபுணனரன் விசையன்வழா அன் பொருநன்
பெருந்தகைபி ரானிறைவ னுதன்மன்னன் பெருமா
னேசமுடி யோன்காந்தன் றலைவன்றுட் டிகனே
நிருபனு யகன்கொழுநன் விடலைபூ பதியே. (59)

பதிமுதல்வன் புரவலனு திபன்றீரன் பூபன்
பதிதன்கா வலன்மகிபன் மீளியொடு காளை
யதிபனைம்பத் தாறுபெயர் புவிராசர்க் குரைப்பார்
அடுத்தோத லீதல்படைக் கலம்பயிறல் வேட்டல்
எதிர்பகைமேற் சேறல்புவி புரத்தலவர் தொழிலாம்
எழுபடைகூழ் குடியமைச்சு நட்பரணு றுடைமை
நிதியினறம் பொருளின்பந் தனையறத்தான் மறத்தா
னிருமித்த *லாசிரிய னெறி நடத்தல் முறையே. (60)

முறையரிச்சந் திரனளன்பு ரூரவாச் சகரன்
முசுகுந்தன் கார்த்தவீ ரனுஞ்சக்கர விருத்தர்
திறைகொள்விரா டன்காரி *நிருதிதுந்து மாரி
செம்பியனே சகரனளன் முதல்வள்ள லேழாம்
அறிகன்னன் சிசுபாலன் சந்திமான் சந்த
னந்திமான் வக்கிரனக் குரனிடையேழ் வள்ளல்
பெறுமலைய னெழிலிநள்ளி பசுந்தொடையன் பாரி
பேகனோ ரியுங்கடையேழ் வள்ளன் மூவகையே. (61)

வகுத்தபா ரதர்குருகோத் திரர்கவுரர் பவுரர்
வழிப்பேராம் பனைக்கொடியோன் சரவணையிற் படுத்
பகுத்தகாங் கயன்பிரம சாரிவீட் டுமன்பேர் [தோன்
பாண்டுகுந்தி சேய்முரசுக் கொடியனுதிட் டிரனே

* மூவொன்பான் (பி-ம்.)
* லரசரிய (பி-ம்.)
* நிருபிதுந்து (பி-ம்.)

தகைப்பொறையன் குவளைமா லையன்றருமன் பேராஞ்
சற்பதுசன் காந்தாரி திருதிராட் டிரன்சேய்
தொகுத்தவணங் காமுடியன் வலம்புரிமா லிகையான்
சுயோதனனைந் தாந்திரியோ தனன்பேர்கன் னிகையே.

கன்னனங்கர் கோன்கச்சைக் கொடியோன்கா னீனன்
கதிர்சேய்குண் டலனுமா ருதிபிருகோ தரனே
மின்னிடும்பி *மன்கையுரன் சிங்கதுசன் றண்டன்
வீமன்பேர் காண்டீபன்பற் குனன்சைல சாசி
தன்னனுமக் *கொடியனல்லற் குருப்பாத்தன் விசையன்
றனஞ்செயன்சு வேதவா கனன்மகவான் பாலன்
பன்னும்விவற் சுனன்காண்டா வனப்பகை கிரீடி
பாசுபதன் கிருட்டிணனர்ச் சுனன்பெயராய் மதியே.

மதிகுலத்தான் மீனவன்கை தவன்வேம்பின் றாரான்
வழுதிவர குணன்மாறன் செழியன்வைகை நதியான்
பொதிகையினன் றமிழ்நாடன் கொற்கையன்கூ டலினன்
பூழியனுக் கிரன்குமரிச் சேர்ப்பன்மீன் கொடியோன்
சிதைவில்கவு ரியன்முடியோ டுதித்தவன்பஞ் சவனுந்
தென்னனும்பாண் டியன்மூவேழ் புலிக்கொடியோன்
[பொன்னி
நதியுடையான் செம்பியன்கோச் சூரியன்மால் வளவன்
நற்கோழி வேந்தனுர் மாலையனே ரியனே. (64)

நேரிவெற்பன் கிள்ளிசென்னி புனனுட னபையன்
நிகழ்சோழன் பதினைந்தாங் கொல்லிவெற்பன் கோதை
கேரளன்குண் டகன்கோளன் வில்லவன்வஞ் சியினன்
கிரிப்பொருநைத் துறைவன்பூ ழியனுதியன் குடகன்
சேரலன்குட் டுவன்வரம்பன் மலையமான் குடக்கோ
சேரமான் பொறையன்வா னவன்கொங்கன் போந்தின்
றாரினன்மூ வேழ்பெயருஞ் சேரன்பேர் வேளிர்
தருகுறும்ப ரரிட்டர்புரோ சருங்குறுமன் னவரே. (65)

மன்னியசூழ் வோருழையர் நூலரெண்ணர் துணைவர
மாத்தியர்மூத் தோர்முதுவோர் தேர்ச்சியரே ஞதி
பொன்னமைச்ச ராவிரிவை மந்திரிக ளுமம்
பொருநர்படைத் தலைவர் சேனைசர்தள வாய்பேர்
நன்னிமித்தி கன்சாக்கை வள்ளுவனுள் ளளப்போ
ஞமமாங் காவிதியர் கணக்கரபி தானந்
துன்னுபரி யாளர்முறை யோர்பரிவா ரப்பேர்
தோற்றுகா ரியக்காரர் கருமரெனும் பரிசே. (66)

பரதவரெட் டியர்நாய்கர் கவிப்பரிளங் கோக்கள்
பரதர்சீ ரகத்தாமர் கோவலர்கோ வளிப்போர்
பொருள்வேச ரதருழவ ரொட்டியர்மூத் தொழிலோர்
பொன்னீட்டர் தேசிகரிச் சியர்வணிக ரிப்பர்
தருமமன்னர் செட்டியர்கோ வர்த்தனர்சி லேட்டை
தனவசியர் கோவசியர் பூவசியர் பொதுப்பே
ருரையோதல் வேட்டல்பசுக் காவலுழ கார
முழவுவா ணிபம்வசியர்க் காகுமறு தொழிலே. (67)

தொழிலாளர் வெள்ளைவட்டர் காராளர் களமர்
சுரநதிகு லேசர்கார்ப் பிணையர்மே ழியினோர்

* மனகயுரன் (பி-ம.)

* கொடியனவ்வற் (பி-ம்.)

உழவர்பூ பாலர்குவ ளைத்தாமர் சதுர்த்த
ருயிர்வளர்ப்பார் வேளாள ரயன்பதத்தி லுதித்தோர்
விழைவிளைஞர் பதினைந்துஞ் சூத்திரர்பே ரிவர்க்கு
வியன்கல்வி யுழவீதன் மூவர்தொழின் முடித்தல்
வழிபாடு வாணிபமா மறுதொழிலென் றுரைப்பார்
வகுத்தநாற் குலக்கலப்பி படுவோர்மற் றவரே. (68)

மற்றவயித் தியர்பிடக ராயுள்வே தியர்மா
மாத்தியர்வா கடர்மருத்தர் பண்டிதர்பே ரேழாம்
வெற்றியரை வனர்துவட்டர் தபதியர்கண் ணாளர்
வினைஞர்கொல்லர் சிற்பியர்தட் டார்முனைவர் சொன்ன
ருற்றறிவார் மண்ணீட்டர் கஞ்சகலர் கன்னர்
ஓவர்தச்சர் கம்மியர்பேர் பதினெட்டா மோகர்
சித்திரரோ வியர்பேராந் தோற்றுன்னர் பொல்லர்
செம்மார்பே ராரியர்மி லேச்சர்மிலைச் சருக்கே. (69)

சரிதையுறு யோனகர் சோனகர்யவன ராகுஞ்
சங்கீர்வார் வளைபோழ்க ரூன்விற்பார் சூனர்
ஒருநூலர் கைக்கோளர் தந்துவாயர்த் தருமா
முமணரே யளவருப்பு வாணிகர்பேர் சிற்பி
மருளுவச்சன் பேர்குயவன் வேட்கோபி வேளான்
மட்பகைசக் கிரிகும்ப காரகன்கு லாலன்
றரிகுசவன் பேர்சூனர் பொல்லர்துன்னர் சாலி
தைப்போர்பேர் காரோட ருறைகாரர் மானே. (70)

மானியே ஞதிசீ மங்கலிமஞ் சிகனே
மயிர்வினைஞன் நீர்த்தனு விதன்பேர்சண் டாளர்
ஈனர்கன கதர்களைஞர் கொலைஞர்மா தங்கர்
இழிஞர்வங்கர் குணுங்கர்சுவுண் டரும்புலையர் பேராந்
தேனிசையர் வயிரியர்பண் ணவர்சூத ரோவர்
சென்னி யர்வந் திப்பர்செயிரியர் மதங்கர் பாணர்க்
கானபேர் சக்கிரியு நந்தியுஞ்செக் கான்பே
ரடிதூச னேகாலி யீரங்கோ லியனே. (71)

கோலியகா ழியர்வண்ணர் பேராம்பாசீகர்
கூவியர்பண் ணியர்பாகர் பாசகரே மடையர்
வாலுவரு மவர்க்காகுந் தமிழ்க்கூத்தர் பேரே
வாயிலோர் கழைக்கூத்தர் பேரேவே ழம்பர்
தோல்வினைஞர் பேர்பறம்பர் பாடினிபேர் பாட்டி
சொல்விறலி மதங்கியாங் கஞ்சுகிமெய் காப்பான்
சால்வலவர் பண்ணுவார் வாதுவர்மா வலர்மாச்
*சானியர்பேர் மதயானைப் பாகர்தோ ரணரே. (72)

தோராத தேர்ப்பாகன் வலவன்சா ரதியுஞ்
சூதனுமாங் குணுங்கர்சவுண் டிகரியவர் குழலர்
எராரு நரம்பர்குயி லுவர்மேழர் யவன
ரிசைப்போர்பேர் படுவர்சவுண் டிகர்பழையர் பிழிஞர்
ஓராய கள்விலைஞர் பேர்கிழவ னுரியோன்
உல்லியரே கூவனூ லோர்பேர்நீ காமன்
வாராரு மீகாமன் மீவான்மா லுமியு
மரக்கலன்பேர் †நீகான்பேர் நியவனென விரும்பே. (73)

* சாணியர்போ (பி-ம.)

† நீசன் (பி-ம்.)

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

**தமிழகராதி ஆதார நூற்றொகுதி**

**நாம தீப நிகண்டு.**

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரையுடனுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா 2-0-0

**அரும்பொருள் விளக்க நிகண்டு.**

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல் லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா 1-4-0

**கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.**

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா 0-6-0

**திருக்குறள்**

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும் (வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொலலிக்காட்டுவது சுலபமன்று. விலை அணு 0-12-0

**களவியற் காரிகை.**

ஒரு சிறந்த அகப்பொருளிலக்கண நூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 3-0-0

**நூற்பொருட் குறிப்பு.**

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம், 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட்குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிகஇன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 10-0-0

**இராஜசுந்தரம்.**

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா 0-8-0

**தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா**

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B. A., B. L.,

விலை அணு 0-6-0

கலா நிலையம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.



# ANCIENT JAFFNA

MUDALIAR C. RASANAYAGAM C.C.S.

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European. Professor. S Krishnasamy Iyengar has given an appreciative forword.

PRICE Rs. 5-8 0

**KALANILAYAM**

PURASAWALKAM :: VEPERY, MADRAS.



## எமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

**செந்தமிழ்க்காதை.**

கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

## கலாநிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

**தலையங்கங்கள்:**—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷபத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முபலவேண்டா. விளம்பினால் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:**—(K. இராமரத்நம் ஐயர், B. A) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:**—(T. S நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:**—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:**— K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

## 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

**தலையங்கம்:**—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினும் அருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:**—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிஸாரோ நாடகம்:**—ஆங்கிலப்புலவர் R. B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:**—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:**—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவசரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் காவல்.

**களவியற் காரிகை:**—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:**—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— டைண்ட் செய்யாதது ரூ. **7 8 0**

காலிகோ கில்ட் பைண்ட் ரூ **8 8 0** ஆப்லேதர் கில்ட் பைண்ட் ரூ **9 0 0**

இவ்விலையில் தபால் அல்லது இரயில சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டுணுக்களுக்கு மேல் இரயில்வே க டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னுப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது முன்பணம் அனுப்பி எழுதல வேண்டும்.

# வர்த்தமானம்

பண்டைப் பெண்கள் நிலை:—"நியு இந்தியா" பத்திரிகையில் ஸ்ரீமான் ஜீனராஜ தாஸர் எழுதியுள்ள கட்டுரையின் சுருக்கம்:—

சமூகவாழ்வில், பண்டைக்காலப் பெண்கள் ஆடவர்களுக்கு அடங்கித்தானிருந்தார்கள். எனினும் இருபாலாரும் தத்தம் கடமையைச் செய்தல் என்னும் கொள்கையராயிருந்தமையினால் அந்நாளில் பெண்கள் செல்வாக்குடையவர்களாய் இருக்கமுடிந்தது. பெண்கள் சிலர் திரைக்குள்ளிருந்துகொண்டே நாடும் ஆண்டனர். கடமையின் அஸ்திவாரத்தின்மீது எழுந்துள்ளவாழ்க்கையில் உயர்வும் தாழ்வும் உரிமையும் ஏது.

இந்நாளிலோ கடமையை எல்லோரும் மறந்துவிட்டனர். உரிமையென்றவொன்று தலையெடுத்து வாழ்க்கையைக் குலைத்து வருகின்றது. ஒவ்வொரு மனிதனும் தனது உரிமையில் நாட்டம்வைத்து விவகரித்தால் அமைதியான ஒரு சமூகநிலை எய்தப்பெற எங்ஙனம் இயலும். முன்னைப்போல் மீண்டும் கடமையிலே வாழ்க்கை நிலைக்குமாயின் சமூகமுன்னேற்றம் எளிதிற் கைவரப்பெறும்.

***

ஸ்காட்லாண்டிற்குச் சுயவாட்சி:—அயல்நாட்டுச் செய்தியொன்று கூறுவதாவது:—

ஸ்காட்லாண்டு ஜனங்கள் பிரிட்டனிலிருந்து தம் நாடு பிரிந்துபோகவேண்டுமென்று முயன்றுவருகின்றனர். பிரிட்டிஷ்பார்லிமெண்டின ஸ்காட்லாண்டுதேச அங்கத்தினர் ஒருவர் ஸ்காட்லாண்டிற்குச் சுயவாட்சி யளிக்கவேண்டுமென்று ஒரு மசோதா கொண்டு வந்திருக்கின்றார். அம் மசோதாவைப் பார்லிமெண்டு சபையில் பிரேரேபிக்கையில் அவர் கூறியதாவது:—

பிரிட்டனிலிருந்து ஸ்காட்லாண்டு பிரியவேண்டியது மிகவும் அவசியமாகும். அப்பொழுதுதான் ஸ்காட்லாண்டு மக்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேற இயலும். தற்பொழுது ஸ்காட்லாண்டு பிரிட்டிஷ் பார்லிமெண்டிற்கு 148 அங்கத்தினர்களை யனுப்புகின்றது. இப்பிரதிநிதித்வம் ஸ்காட்லாண்டின் முன்னேற்றத்திற்குப் போதாது.

எடின்பரோவில் ஸ்காட்லாண்டிற்கென்று தனியான பார்லிமெண்டுசபை வேண்டும். ஏழு பேர் அடங்கிய சுப்ரீம்கோர்ட் ஒன்றும் ஸ்காட்லாண்டிற்கென்று நியமனம் பெறவேண்டும். ஸ்காட்லாண்டின் நீதி நிர்வாகமும், ஜனநலத்திற்கான மற்றக் காரியங்களும் ஸ்காட்லாண்டு தேச ஜனப்பிரதிநிதிகளின் கையிலேயே யிருக்கவேண்டும்.

இன்பத்திற்கு வழி.—ஈன்ஸ்டின் எனனும் சிறந்த சாஸ்திர ஆராய்ச்சி நிபுணர் ஒரு பத்திரிகை நிருபரிடம் கூறியதாவது:—

"இன்று உலகத்தில் நிலைத்து நிற்பது சாஸ்திர ஆராய்ச்சிதான். கடந்த நூற்றாண்டில் அரசியல்சாஸ்திரம் (Politics) கொண்டாடப்பட்டது. அதைப்படிப்பதும் ஆராய்வதுமாய்ப் பலர் இருந்தனர். அந்நூல் இப்பொழுது பொய்த்துவிட்டது. அரசியல் நூலால் எவ்விதப் பயனும்யாருக்குமில்லை. சாஸ்திர ஆராய்ச்சி சாச்வதமானது. என்றும் அவ்வாராய்ச்சி வளர்ந்தேவரும். இந்த நூற்றாண்டில்சாஸ்திர ஆராய்ச்சி மிகவளர்ந்துள்ளது. இவ்வாராய்ச்சியால் ஜனங்கள்இன்னும் பல அதிசயங்களைக் காணப்போகின்றார்கள்" என்று அவர் சொல்லிக்கொண்டு போகையில் பத்திரிகைநிருபர் இடைமறித்து, "உலகத்தில் இப்பொழுது மக்களை அலைக்கும் தொல்லைகள் சாஸ்திர ஆராய்ச்சியால் அகலுமா? மனிதனும் சமூகமும் இன்பத்தை அடையுமா? சாஸ்திர ஆராய்ச்சி இம் முடிவினிற்கு உதவி செய்யுமா?" என்று கேட்டார்.

அதற்கு விடையாக அந்நிபுணர், "பூத சாஸ்திர ஆராய்ச்சியால் மனிதன் இன்பம் அடைய முடியாது. மனிதன் மற்ற எதனாலும் இன்பத்தைப்பெற முடியாது. அது ஒரு மனநிலை. மனிதன் உள்ளமே இன்பத்தை இயற்றிவைக்கவேண்டும். புறவஸ்துக்களால் அந்நிலையை உதவ முடியாது" என்று எடுத்துக் கூறினார்.

***

'தனம்' என்னும் பெயருடைய மாத சஞ்சிகை வரப்பெற்றோம். இந்தச் சஞ்சிகை K. S. நாயரால் பாலக்காட்டில் பிரசுரிக்கப்படுகிறது. இதன் ஆசிரியர் N. பாலசுப்பிரமணியன் என்பவர். விவசாயம், வியாபாரம், கைத்தொழில்களின் வளர்ச்சியும் அதனால் உண்டாகும் பொருளாதார வளப்பமும் இந்தியாவில் ஏற்படவேண்டு மென்பதும் நோக்கமுடையது இது என்று கூறப்பட்டுள்ளது. இதன் வருட சந்தா ரூ. 2

***

கலகத்தா சாவ கலாசாலையின் மத விஷய ஆசிரியராகக் காந்தியடிகளையும், அக்ஷத ஆசிரியராக ஸர். ராஜேந்திரநாத முகர்ஜியையும் நியமிக்க எண்ணியிருக்கின்றனர் என்று கலகத்தாவில் நடக்கும் லிபர்டி என்னும் பத்திரிகை கூறுகின்றது.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

| பாஷிக்குகள் : | | தைலங்கள் : |
|---|---|---|
| ச்யாவனப்ராச | | அமிர்தாமலக |
| ஜீவஸுதா | | பிருங்காமலக |
| பதாமி லேகியம் | | ஸுகுமார |
| தந்வந்தரி லேகியம் | | ஹிமஸாகர |

"பாலஸுதா" குழந்தைகளுக்குச் சிறந்த டானிக் (ரூபா 1-0-0)

காஸ்ட்ராலக்ஸ்: சுத்தம் செய்து மூலிகை சேர்ந்த ஆமணக்கெண்ணெய் (6 அவுன்ஸ் 8 அணா)

ஸ்ப்ளிவரால்: குழந்தை கட்டிக்கும், ஜ்வரக் கட்டிக்கும் (ரூபா 2-0-0)

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை, (அணா 4) கோரோஜனை மாத்திரை, (அணா 6) பால ஸஞ்சீவினி (அணா 4)

நஞ்சன்கூடு பல்பொடி

(தபால் பில்லையுடன் லிஸ்டிக்கு எழுதவும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.)


KALANILAYAM
Reg. No. M. 2324.


## — சரஸ்வதி பவுண்டரி —

தந்திவிலாசம்:—காஸ்டிங்.] [Established 1904] [டெலிபோன் நெ:—3002

**96. புளியந் தோப்பு ஹைறோட், பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.**

எம்மிடம் தேர்ச்சிபெற்ற இந்தியத் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்ட ரங்கூன் & அமரிக்கன் டைப், ரைஸ்ஷெல்லர்களும், பாலிஷிங் கோன்களும், மூன்று தினுசாயுள்ள சவரன் டை பிரஸுகளும், வெள்ளிப் பாத்திரங்கள் செய்யும் பிரஸுகளும், பொன் வெள்ளித் தகட்டாலைகளும், கரும்பாலைகளில் கல்கத்தா சைஸ்களும், சாதா மூன்று கால் கரும்பாலைகளும், தண்டவாளச் சுழல்படிகளும், தண்டவாளத் தூண்களும், பலவிதமானத் தண்டவாளக் கிராதிகளும், ஆயில் காஸ் மோட்டார் எஞ்சின்களுக்குத் தேவையாயுள்ள ஸிலிண்டர், வாட்டர் ஜாகட்டுக்களும், மற்றத் தனிச் சாமான்களும், எங்கல்பர்க் டைப் நெம்பர் 1, 2, 3, 4, 7 & 8 பால்பேரிங் & சாதா ரைஸ் ஹல்லர்களும், அவைகளுக்குவேண்டிய தனிச் சாமான்களும், தண்டவாள சாதா புல்லிகளும், படபாதிப் புல்லிகளும், கிடைக்கும். ஆயில் காஸ் ஸ்டீம் எஞ்சின்களின் லைனரை ரீபோர் செய்தும் புதிய பிஸ்டன் போட்டும் கொடுக்கப்படும்.



முனிஸிபாலிடிகளுக்குத் தேவையாயுள்ள எலக்ட்ரிக் விளக்குப் போஸ்டுகளும், சாதாரண 1, 2, 3, 4, 5 கிளையுள்ள லாந்தர் போஸ்டுகளும், வாராவதிக்குப் போடக்கூடிய லாந்தர்போஸ்டுகளும் பிராக்கட்டுக்களும், மேனேல் கவர்களும், திம்மிசுகளும், குப்பைவண்டி இன்லெட் அவுட்லெட் வால்வுசெட்டுகளும், பைப்பு பிட்டிங்கிற்கு வேண்டிய தண்டவாளக் குழாய்களும், கப்ளிங் பைப் டீ, பிரான்ச் ரெடியூஸர்களும், தோட்டத்தில் போடக்கூடிய தண்டவாளப் பெஞ்சு கால்களும், பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய சாதா மடிப்புப் பெஞ்சுகளும் கிடைக்கும்.

மைல்ஸ்டீல் தகட்டினால் செய்த பாயிலர் சிம்னிகள், டாங்குகள், நெல் அவிக்கும் பாய்லர்கள், டிரஸ்கள், வாராவதிகள் இன்னும் பலவிதமான ரிவிட்டு வேலைகள் யாவும் நேர்த்தியாய்த் தயாரித்துக் கொடுக்கின்றோம்.

சார்ஜிகள் மிகவும் சரசம். குறித்த காலந் தவறுவதில்லை. கேட்லாக்கிற்கு எழுதவும்.



— தேகபலம் —

## :: புத்திர சந்தானம் ::

இவைகளையடைய எங்கள் ஆதங்க நிக்ரஹ மாத்திரைகளை உபயோகியுங்கள்.

சென்ற 51 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று வருகின்றன.

மேலும் தேக அசதி, மலச் சிக்கல், ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கண்டிக்கின்றன.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1.
5 டப்பிகள் ரூ. 4.

இனும்! காம சாஸ்திரம் இனும்!

கேட்போருக்கு இனாமாகவும், தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.



ஆ. ஸி. கஸ்தூரிரங்கய்யர் B A, L.T,
இயற்றிய

:: பாகவத வினு விடை ::

சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்ட 550 பக்கங்களும் 20 சித்திரப்படங்களும் கொண்டது. விரிவான அட்டவணையும், கிருஷ்ண லீலை, லீலா சுகர் கதை போன்ற பலமுக்கியமான விஷயங்களின் மெய்க்கருத்தை விளக்கும் அநுபந்தங்களும் அடங்கியுளது. விலை ரூ. 2

பாலவிநோதினி ஆபீஸ், 323, தங்கசாலையாரப்பேட்டை வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்



## NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

**Head Office:**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

| | |
|---|---|
| New Policies Issued in 1931 for over ... ... | Rs. 1,32,33,000 |
| Showing an increase over the New Business figure for 1930 of ... ... | 16.54 % |
| Claims paid up to end of 1931 over ... ... | Rs. 90,00,000 |
| Invested Funds amount to over | Rs. 1,75,00,000 |

LOW RATES LIBERAL CONDITIONS
NEW TABLES NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

**FIRE & ACCIDENT RISKS**
**covered by**
**NATIONAL FIRE**
AND
**GENERAL INSURANCE COMPANY Ltd.,**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)